# செம்பதாகை

மலர்: 6
இதழ்: 1
1984 - தை
விலை ரூபா 1-50
புரட்சிகர வெகுஜன ஏடு

# வட்டமேசை மாநாட்டின் பேச்சுவார்த்தை பயன் தருமா?

**இனப்** பிரச்சனையின் தீர்வுக்கென வட்டமேசை மாநாடு நடைபெறுகிறது. இன்றைய நிலையில் இம்மாநாட்டு முடிவுகள் ஒரு சாதகமான சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்த வேண்டும். இதற்கு மாநாட்டில் பங்குகொள்ளும் அரசியல் கட்சிகளும், வெளியே உள்ள அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் தத்தமது பங்களிப்பை வழங்கவேண்டும். பாராளுமன்ற அரசியல் நலன்களையோ அன்றி குறுகிய அரசியல் லாபங்களையோ முதன்மைப் படுத்தாது தேசத்தினதும், நாட்டுமக்கள் அனைவரினதும் அடிப்படை நலன்களை மனதில் கொண்டு செயல்படுமாறு சகல கட்சிகளையும் கோருகின்றோம்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேல் இனப்பிரச்சினை பாராளுமன்ற கட்சி அரசியலுக்கும். அதிகாரப்போட்டிக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனால் லாபமடைந்தவர்கள் ஆளும் வர்க்கத்தினரும், அவர்களின் தரத்தில் நின்றவர்களும் மட்டுமே. சாதாரண சிங்கள—தமிழ் முஸ்லிம் மக்கள் கஷ்டங்களையும் நஷ்டங்களையுமே பெற்றுக்கொண்டனர். குறிப்பாகத் தமிழ் மக்கள் அடைந்த துன்ப துயரங்களுக்கு நிகர் வேறொன்றும் கிடையாது.

ஆதலினால் தான் இனப் பிரச்சினையின் தீர்வுக்கென முதன் முதலாக சர்வகட்சிகளின் சம்மதத்துடன் இடம் பெறும் வட்டமேசை மாநாடு நல்ல முடிவுகளையும், விளைவுகளையும் ஏற்படுத்த வேண்டும் என நாட்டு மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள்.

வட்டமேசை மாநாடு பிரச்சினையைத் தீர்க்குமா? இல்லையா? என்று விவாதம் கிளப்புவதோ அல்லது கடந்த காலப் பேச்சுவார்த்தைகளை ஞாபகப்படுத்துவதோ, அல்லது பேச்சுவார்த்தைகளே வேண்டாம் என்று ஒரு முனை வாதப்போக்கில் செயல்படுவதோ இன்றைய நிலையில் உகந்த நடைமுறைகள் அல்ல. தேசத்தையும், மக்கள் அனைவரையும் நேசிப்பவர்களின் இன்றைய கடமை மாநாட்டு முடிவுகள் நல்லபடியாக முடிவுற முடிந்தளவு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனபதேயாகும். இந்த விருப்பத்திற்கு மாறான முடிவுகள் ஏற்பட்டு பேச்சுவார்த்தைகள் பயன்தராது போனால் அது தேசத்திற்கும் மக்களுக்கும் பெருநட்டத்தையே ஏற்படுத்தும். அதற்கான பொறுப்பை சம்பந்தப்பட்டவர்களே ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

மாநாட்டில் பங்கு கொண்ட பத்து அரசியல் கட்சிகளில் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கட்சி இடைநடுவில் வெளியேறி விட்டது. அக்கட்சியின் நோக்கம் மிகக் குறுகலானது. ஏதோ சிங்கள மக்களின் நலனுக்காக தான் மட்டுமே நிற்பதுபோலக் காட்டி பிரபல்யம் தேடிக் கொண்டு எதிர்காலப் பாராளுமன்ற அரசியல் அதிகாரப் போட்டிக்கு ஒரு அடிப்படையைத் தேடிக்கொள்ள முனைந்துள்ளது. ஆனால் இத்தகையவர்களை சிங்களமக்கள் எளிதில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஏனையகட்சிகளும் அமைப்புகளும் இவ்வாறு நடந்து கொள்ளாது பிரச்சினைகளை வெளிப்படையாகவும், நேர்மையாகவும் பேசி நல்ல முடிவுக்குவர சகல முயற்சிகளையும் செய்யவேண்டும். இதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, இடதுசாரிக் கட்சிகள் போன்றன தமது முன்முயற்சிகளை பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுத்தவேண்டும். தத்தமது கட்சிகளின் எதிர்கால பாராளுமன்ற பதவி அபிலாஷைகளை எச்சந்தர்ப்பத்திலும் முதன்மைப்படுத்தாது தேசத்தின்—மக்களின் எதிர்கால வாழ்வை முதன்மைப்படுத்தி மாநாட்டு விஷயங்களைக் கையாளவேண்டும் என்பதையே மக்கள் சார்பாக நாம் வலியுறுத்துகின்றோம்.

ஒவ்வொரு கட்சிக்கும் இனப்பிரச்சினை சம்மந்தமாக சொந்தக் கொள்கைகள் உண்டு. எம்மைப்பொறுத்து இனப் பிரச்சனையின் தீர்வானது இன்றைய முதலாளித்துவ சமுதாய அமைப்புக்குள் முற்று முழுதாகத் தீர்க்கப்பட முடியாது என்ற கருத்தையே கொண்டுள்ளோம். முழுத் தேசத்தையும் புரட்சிகரப் போராட்டம் ஒன்றினால் விடுதலை செய்வதன் மூலம் உருவாகும் ஒரு உண்மையான ஜனநாயக அமைப்பின் கீழும், அதைத் தொடர்ந்து அமுலுக்கு வரக்கூடிய சோஷலிச அமைப்பின் ஊடாக மட்டுமே இனப் பிரச்சினையை முற்று முழுதாகத் தீர்த்துவைக்க முடியும் என நம்புகின்றோம். அந்த நம்பிக்கையை நடைமுறைப் படுத்த எடுக்கும் இயக்கம், கொள்கை போராட்டம் என்பனவற்றையும் தற்போதைய தற்காலிக தீர்வுக்கான பேச்சுவார்த்தையையும் ஒன்றாக வைத்துக் குழப்பக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

இனங்களுக்கிடையில் எப்பொழுதும் பகைமையும், கொந்தளிப்பும், பதட்டமும் இருப்பதை விரும்புவோர் தேச விடுதலையின் நோக்கத்தையும் வர்க்கப்போராட்டத்தின் வளர்ச்சியையும் திசை திருப்ப முனைபவர்களாக மட்டுமே இருக்க முடியும். எனவே இனப்பிரச்சினையின் குறைந்தபட்சத் தீர்வுக்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்வதே சரியானதாகும். அதனாலேயே இன்றைய பேச்சுவார்த்தை பயன் தரவேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

★

## செம்பதாகை 6-வது ஆண்டினுள் பிரவேசிக்கின்றது!

**செ**ம்பதாகைப் பத்திரிகை 1984ம் ஆண்டு தைமாதத்தில் தனது ஐந்து வயதைப் பூர்த்தி செய்து ஆறுவது வயதினுள் பிரவேசிக்கின்றது என்பதை அதன் வாசகர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த ஐந்து ஆண்டுகளில் தனது வளர்ச்சிப் பாதையில் செம்பதாகை பல கஷ்டங்களை கடந்தே முன்னேறி வந்துள்ளது. ஆறுவது வயதை அடையும் இவ்வேளை தனது தரத்திலும், எண்ணிக்கையிலும் பலமடங்கு வளர்ச்சி கண்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் அதன் சகல வளர்ச்சிக்கும் வாசகர்கள், ஆதரவாளர்கள் தமது ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம். புத்தாண்டு வாழ்த்துக்களை செம்பதாகை உங்கள் முன் வைத்து பூரிப்புடன் ஆறுவது வயதுடன் வெளிவருகிறது.

வணக்கம், நன்றி.

# இடம் பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் கோரிக்கையும் அவர்களின் போராட்டமும்

**வட** பகுதியில் இடம் பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்திய உண்ணாவிரத இயக்கம் ஒரு உச்ச கட்டத்திற்குச்சென்று, யாழ்-பல்கலைக்கழகம் மூடப்பட்டு உண்ணாவிரதிகள் கடத்தப்பட்டதுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கான சூழ்நிலையை உருவாக்கிய பொறுப்பு அரசாங்கத்தையே சாரும். ஒன்று யூலை மாதச் சம்பவங்களின் தாக்கம். இரண்டாவது எவ்வித பாதுகாப்பு உத்தரவாதமும் வழங்காது பல்கலைக்கழகங்களுக்குத் திரும்புவதற்கு காலக்கெடு விதித்த நிகழ்ச்சியாகும். இதில் அரசின் நடவடிக்கை கண்டனத்திற்குரியது.

மாணவர்களின் கோரிக்கைகள் சிலவற்றில் நியாயம் இருந்தது. அதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட உண்ணாவிரதப் போராட்டமுறையும் தவறான ஒன்றல்ல. ஆனால் அதை நடத்துவதற்கு எடுத்துக்கொண்ட சந்தர்ப்ப சூழ்நிலையும், சாகும்வரை உண்ணாவிரதம் என்ற முடிவும் அன்றைய நிலையில் பொருந்தக் கூடிய ஒன்றாக இருக்கவில்லை. மாணவர்களுக்கு பொதுமக்கள் மத்தியில் அனுதாபமும் ஆதரவும் இருந்தது. அதே வேளை நடைபெற்றுக்கொண்டிருந்த வட்டமேசை மாநாட்டை உண்ணாவிரத இயக்கம் ஊறுபடுத்திவிடுமோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் பரவி இருந்தது.

மாணவர்களுக்கு காட்டப்பட்ட பொதுமக்களின் நியாயமான ஆதரவை சில சக்திகள் மிகைப்படுத்தி மக்களுக்கே கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மக்களின் மீது திணித்ததையும் காண முடிந்தது. சிலர் 'மாபெரும் வெகுஜனக் கிளர்ச்சியை' நோக்கிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது. எந்த ஒரு கோரிக்கைக்கும் அல்லது போராட்டத்திற்கும் அக, புற யதார்த்த சூழ்நிலைகள் விதிக்கும் எல்லைகள் உண்டு. அதற்கு அப்பால் வெறும் கற்பனாவாத ரீதியில் செயல்பட முனைவது சரியான அரசியல் ஞானமாகவோ, மக்கள் நலன் சார்ந்த நிதானப் போக்காகவோ இருக்கமுடியாது.

உண்ணாவிரதத்தை நடத்திய மாணவர் அமைப்பும் அதற்கு ஆதரவு கொடுத்த ஏனைய சக்திகளும் முன்கூட்டியே கலந்துபேசி உண்ணாவிரதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்திருக்கலாம். அதைவிடுத்து திடீரென உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டுவரப் பாவிக்கப்பட்ட வழிமுறை ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல.

மேலும் மாணவர் கோரிக்கைக்கு ஆதரவுதெரிவிக்க முற்பட்டு ஒவ்வொருவரும் தத்தமது கொள்கைகளை வலியுறுத்துவது, பிரசாரம் செய்வது போன்ற நடவடிக்கைகள் ஒன்றை நினைத்து வேறொன்றைச் செய்வது போன்ற நிலையையே உருவாக்கியது.

இவ்விடயங்களை எல்லாம் சீர்தூக்கிப்பார்த்து இக்கட்டான நிலையில் உள்ள இடம் பெயர்ந்த மாணவர்கள் தமது நியாயமான கோரிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு மாணவர் அமைப்பும் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் சகல அமைப்புகளும் ஜனநாயகக் கலந்துரையாடலின் மூலம் ஒன்றுசேர்ந்து செயல்படுவதே இன்றைய தேவையாகும். அத்துடன் மாணவர்கள் மிகவும் நிதானமான முடிவுகளின் அடிப்படையில் செயல்படுவதும் அவசியமாகும்.

அதேவேளை இடம் பெயர்ந்த மாணவர் விடயத்தில் அரசு மேலும் பிடிவாதத்தைச் சாதிக்காது, தத்தமது சுயவிருப்பத்தின்மீது படிப்பைத் தொடர விரும்பும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு அனுமதியை வழங்குவதன் மூலம் ஒரு நியாயமான தீர்வை ஏற்படுத்த வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

★

# பேச்சுவார்த்தையும் பொறுப்புணர்ச்சியும்

தி. வி. கூ. தலைமை தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் காரணமான உலக அனுதாபத்தையும், அரசாங்கத்தின் பொறுப்பின்மை காரணமாகவும் பெரும்பான்மை இனச்சார்பான நடத்தையாலும் உருவான அபிப்பிராயச் சூழலையும் தமிழ்மக்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுத்துவது தவறில்லை. ஆனால், தமிழ் மக்களுக்குச் சாதகமானது எதுவுமே சிங்கள மக்களுக்குப் பாதகமானது என்னும் அபிப்பிராயத்தை உருவாக்குவது எவருக்குமே நல்லதில்லை. வட்டமேசை மாநாட்டின் முடிவுகளை சர்வசன வாக்கெடுப்புக்கு விட வேண்டாம் என்று கேட்க ஆயிரம் நல்ல காரணங்கள் உள்ளன. நாட்டின் அமைதியற்ற சூழல், சட்டவிரோத சக்திகளது வலிமை, அரசாங்கத்தின் பாதுகாப்புப்பிரிவினரிடையே கட்டுப்பாடின்மை, முக்கியமான சகல பாராளுமன்ற அரசியற் கட்சிகளிடையிலான பரவலான உடன்பாடு ஏற்படும்போது வாக்கெடுப்பு அவசியம் இல்லாமை போன்றன, சமரசத்துக்கு அவசியமான சூழலில் குதர்க்கமான வாதங்கள் ஏற்படுத்தக்கூடிய கொந்தளிப்புக்கள் போன்று பல இருக்க "சிங்கள மக்கள் சர்வகட்சி உடன்படிக்கையை ஏற்க மாட்டார்கள்" என்ற நியாயம் பாவிக்கப்பட்டது மிகவும் விஷமத்தனமானது.

சிங்களமக்கள் சர்வகட்சி உடன்படிக்கையை ஏற்கமாட்டார்கள் என்றால் அவர்கள் மீது திணிக்கப்படும் ஒரு உடன்படிக்கையை அவர்கள் தூக்கி எறிய ஒருநாளும் தயங்கமாட்டார்கள் என்பதும் சரியாகிவிடும். எனவே சிங்களமக்களது ஜனநாயக உரிமைகளை நிராகரிக்காமல் தமிழர்கட்கு நியாயம் பெற முடியாது என்ற நிலைக்கேவர வேண்டும்.

எனவே, ஒரு சர்வாதிகார நிர்ப்பந்தத்தின் கீழான ஒரு தீர்வையே த. வி. கூ. தலைமை விரும்புகிறது என்றாகி விடுகிறது. சர்வசன வாக்கெடுப்பின் மோசடிகளை அன்று நாம் எடுத்துரைத்தபோது தட்டிக்கழித்த கூட்டணிக்கு அதை விமர்சிக்க தைரியம் இல்லாமல் போய்விட்டது. இப்போது சிங்கள மக்கள்மீது பழியைப் போடுகிறார்கள். கூட்டணியினர் தமது விமர்சனங்களை விரும்பினால் தம்முடன் அரசியல் விளையாட்டில் ஈடுபடும் அரசியல் வாதிகளுடன் நிறுத்தவது நல்லது. தமிழ்-சிங்கள மக்களிடையே பகைமையைத் தூண்டுமாறு பேசி இருதரப்பிலும் இனவாத உணர்வுகளைக் கிளறாமல் இருப்பது பொறுப்பான அரசியல் விவேகமாகும். இனவாதத்தை கிளறுவதற்கே காட்டிருக்கும் ஒரு இனவாதக் கூட்டம் சிங்களமக்கள் மத்தியில் உள்ளது. கூட்டணித் தலைமை அவர்கட்காகத்தான் செயல்படுகிறதா?

★

# வடக்கும் கிழக்கும்

வடக்கு—கிழக்கு மாகாணங்கட்கு மொழிவாரியான ஒரு பிரதேச சுயாட்சி என்பது பற்றிய கூட்டணியின் பிடிவாதம் அர்த்தமற்றது. இதன் விளைவுகள் பிற பகுதிகளில் உள்ள தமிழ்மக்களது மொழி உரிமைகட்கும் பிற உரிமைகட்கும் பாதகமாக அமைவது பற்றிக் கூட்டணிக்குக் கவலை இல்லை. முஸ்லிம் மக்களது உணர்வுகளைக் கணிப்பில் எடுக்காது அவர்கள்மீது ஒரு தீர்வைத்திணிப்பது தவறானது. திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலிருந்து பெருவாரியான தமிழ்—முஸ்லிம் தேர்தற் தொகுதிகளைக் கொண்ட ஒரு தனிப் பிரதேசம் அமைக்கப்படுவது சாத்தியமான ஒரு காரியம். இது பற்றி முஸ்லிம் மக்களுக்கு அதிகம் ஆட்சேபனை இருக்க முடியாது. அல்லது இதைவிட வேறுபட்ட முறையில் ஒரு தீர்வைக்கூட நாடலாம். வடக்கும்-கிழக்கும் என்று அடம்பிடிப்பது ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சியில் இன்னொரு புதிய பிரச்சனையை உருவாக்க இடமுண்டு. கூட்டணித்தலைமை முதலில் கிழக்குமாகாண முஸ்லிங்களுடன் இதுபற்றிப் பேசுவது அவசியம். அதைவிட கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்களமக்களது உணர்வுகட்கும் மதிப்பளித்துச் செயற்படுவது மதியூகமானது.

★

# மாணவர்களின் செயல்கள்

## விஷமிகளுக்கு உதவக்கூடாது

பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் பாதுகாப்புப் பிரச்சினை இன்னும் திருப்தியான முறையில் தீர்க்கப்படவில்லை. நிர்வாகம் இவர்கள் பற்றிக் காட்டும் 'அக்கறை' பாராட்டுக்குரிய ஒன்றல்ல. மாணவர்களை எதிரிகளாகவும் பிரச்சினைகளை இனவாத அடிப்படையிலும் நோக்கும் போக்கு நீடிக்கும்வரை வளாகங்களில் பாதுகாப்புப் பிரச்சனைகள் உக்கிரமடையவே செய்யும். இன்றைய சூழலில் தமிழ் மாணவர்களது பிரச்சனைகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் பொதுவாகவே அனுதாபத்துடன் நோக்குவதுடன அவர்களது பரீட்சைகள், அனுமதி, விடுதிவசதிகள் போன்ற பிரச்சினைகளை மிகவும் அனுதாபத்துடன் நோக்குவதும் அவசியம். மே மாதச் சம்பவங்களின் போதே பாதுகாப்புத் தரமுடியாத நிர்வாகம் இத்தகைய அசட்டையினால் மாணவர்களை விரக்தியின் விளிம்புககே தள்ளிவிட முடியும். இது இருதரப்பிலும் உள்ள விஷமிகளுக்கு அலலாமல் யாருக்குமே நன்மை தராது.

அதேவேளை தென்னிலங்கைப் பல்கலைக்கழக இறுதியாண்டுகளில் பயிலும் பெருவாரியான தமிழ் மாணவர்கள் (குறிப்பாக பேராதனை மருத்துவ எந்திரவியல் மாணவர்கள்) வளாகங்கட்கு மீள்வதற்குத் தம் விருப்பத்தைத் தெரிவித்துள்ளதோடு அதைச் செயற்படுத்தவும் முனைந்துள்ளனர். இதன் விளைவாக இதை ஒருபுறம் துரோகம் என்று சிலர் தாக்கவும் பல்வகை மிரட்டல்களில இறங்கவும் நேர்ந்துள்ளது. மாணவர் ஒற்றுமை என்ற பேரில் மிகவும் தகாத செயல்களும் பொறுப்பற்ற நடவடிக்கைகளும் சதி முறையிலான சில செயல்களும் மாணவர்களில் பலரது நலன்கட்கு விரோதமாகச் செயற்பட்டுள்ளன. இதன் விளைவாக, மாணவர் தலைமை மீது கொண்ட நம்பிக்கையீனம் காரணமாக மாணவர்களில் குறிப்பிட்ட சில பிரிவினர் இவ்வாறு செயற்படவும் நேர்ந்துள்ளது பல்கலைக்கழக மாணர்களது பரந்துபட்ட நலன்கள் பற்றிய அக்கறை பல்வேறு மாணவர் பிரிவினருடைய விஷயத்திலும் ஒவ்வொரு பிரிவினருக்குமுரிய சிறப்பான பிரச்சனைகளைக் கணிப்பிலெடுக்கத் தவறும் போது ஒற்றுமை சிதறுகிறது. குறுகிய குழு நலன்களைப் பரவலான பிரச்சினைகளின் மீதான முடிவுகளின் மீது திணிப்பது மாணவர் ஒற்றுமைக்கும் போராட்டத்திற்கும் பாதகமானது. பிரச்சினைகளை ஜனநாயகமான முறையில் அணுகாமல் மிரட்டல், சதி போன்ற முறைகளில் அணுகுவதும் ஐக்கியத்துக்குப் பாதகமானது என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

★

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

அவதானி

# பகிஸ்கரிப்பு உளறலால் பிரச்சினைகள் சிக்கலடையும்

ஜனாதிபதி தேர்தலின் போதும் சர்வசன வாக்கெடுப்பின் போதும் 'பகிஷ்கரிப்பு' கோஷத்தை முன்வைத்துத் தங்களது அரசியல் வெறுமையை அம்பலப்படுத்திக் கொண்ட தமிழீழ விடுதலை அணியினருக்கு இப்போது சிலமாதமாக இருந்தஅரசியல் தூக்கம் கலைந்தாலும் தூக்கக் கலக்கம் இன்னும் அகலவில்லை மறுபடியும் பகிஷ்கரிப்பு என்று பிதற்ற ஆரம்பித்து விட்டனர். போன இரண்டு சந்தர்ப்பங்களிலும் இவர்களது 'பகிஷ்கரிப்பு யாருக்குச் சாதகமாகப் பயன்பட்டது என்று பொதுமக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்று அஞ்சுகிறார்களா? தீராது என்றால் பேச்சுவார்த்தைகளால் நட்டம் நேரும் என்று நினைக்கிறார்களா? அல்லது தங்களை அழையாமல் பேச்சு வார்த்தைகள் நடந்தால் அது கூட்டணி குத்தி அரசியானதாகி தங்கள் குறுகிய வட்டத்துககுப் பயன்படாமல் போகும் என்று அஞ்சுகிறார்களா? இவர்கள் மனதில் தமிழனுக்காக ஈழமா ஈழத்துக்காகத் தமிழனா என்ற கேள்வி பற்றிய தெளிவு சிறிதாவது உண்டா?

பிரச்சனையைச் சுருக்கமாக அவதானித்தால் வட்டமேசை மாநாடு மூலம் பிரச்சனை தீரலாம் அல்லது தீராது போகலாம். தீர்ந்தால் அது எல்லாருக்குமே நல்லது. தீரா விட்டால் அரசாங்கத்தின் வேஷம் அம்பலமாகிவிடுகிறது. எனவே பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதால் எவ்வகையிலும் நியாயமான தீர்வை வேண்டும் சக்திகட்கு நட்டமே இல்லை. அரசாஙகத்துக்கு நேர்மையாகப் பிரச்சனையைத் தீர்க்கும் நோக்கம் இல்லை என்பதும் அல்லது தீவிர இனவாதிகள் தீர்வுக்குத் தடையாக நிற்பார்கள் என்பதும் முக்கியமான பிரச்சனைகள் இல்லாமல் இல்லை. ஆனால் தீர்வுக்குத் தடையாக நின்ற குற்றம் முழுவதும் அரசாங்கத்தையும் அதன்பின் சூலுள்ள இனவாத பிற்போக்குக் கும்பலையுமே சாரட்டும். தற்காலிகமான தீர்வுகள் பற்றிய நம்பிக்கை இல்லை என்பது ஒரு வலிமையான வாதம் அல்ல. பிரிவினைகூட ஒரு ஸ்திரமான, நிரந்தரமான தீர்வாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

இவ்வளவு காலமும் சிங்கள அரசியல் கட்சிகளைப் பற்றி மட்டுமன்றிச் சிங்கள மக்களைப் பற்றியும் தாம் பேசிவந்த கதைகளை த. ஈ. வி. அ. தலைமை நம்பினால் பேச்சுவார்த்தைகள் பற்றி ஏன் அஞ்சவேண்டும்? இலங்கை முழுதும் அழிந்தாலும் பரவாயில்லை. ஈழம் வந்தால் போதும் என்கின்ற சிந்தனை அயல்நாடுகளில் குடியேறிவிட்ட 'தேசபக்தர்கட்கு உகந்ததாக இருக்கலாம். இங்கேஉள்ளவர்கட்கு அல்ல. தம்மைச் சுற்றிக் கூட்டம் சேரவேண்டுமென்பதற்காக எதையாவது உளறி உடுக்கை அடிக்கிறதில் பயனில்லை. கொஞ்சமாவது பொறுப்புணர்வோடு செயற்படுவது நல்லது. ★

# போராட்டம் வேறு அராஜகம் வேறு

ஒரு வர்க்கம், ஒரு இனம், அல்லது ஒரு சமூக மக்கள் தமது கோரிக்கைகளுக்காகப் போரடுவது என்பது முற்றிலும் நியாயபூர்வமானது. அக்கோரிக்கைகளில் சரி, பிழை அல்லது போராட்ட வழிமுறைகள் பல்வேறுபட்டனவாக இருக்கவும் கூடும். இறுதியில் சரியானது மட்டுமே வெற்றி பெறும்.

ஆனால் போராட்டம் என்ற பெயரில் மக்களது வாழ்வில் மீண்டும் மீண்டும் கஷ்டங்களையும், துன்பங்களையும் வேண்டுமென்றே உருவாக்கிவிடும் நடைமுறை ஒரு அராஜக நிலையையே தோற்றுவிக்கும. இச் சந்தர்ப்பத்தை சுயநலவாதிகள், சமூக விரோதிகள் தத்தமது சுயநலத்திற்கே பயன்படுத்தி விடுகிறார்கள்.

நாம் ஒரு மோசமான சுரண்டலும், அநீதியும், அடக்குமுறையும் கொண்ட சமுதாயத்தில் வாழ்கின்றோம். அத்தகைய சமுதாய அமைப்பை மாற்றி அமைக்கும் போராட்டத்தையும் நடத்தவே முனைகின்றோம். அதற்காக சமுதாயத்தின் மக்களுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவதும் ஒருவகைப் போராட்டம் எனக்கொள்ளுவது தவறாகும். மக்களின் சொத்துக்களைக் கொள்ளையிடுவது. அல்லது மக்களுக்கு வந்துசேரவேண்டிய வற்றை முடக்குவது, மக்களின் அன்றாட வாழ்வை நாசம் செய்யும் வேலைகளில் ஈடுபடுவது எல்லாம் போராட்டவகை சார்ந்தவை அல்ல. அவை நிச்சயம் மக்கள் விரோத நடவடிக்கைகளேயாகும்.

எனவே எந்த ஒரு போராட்டத்தையும் முன்னெடுக்க முனையும்போது அது ஏகப் பெரும்பான்மையான மக்க

8-ம் பக்கம் பார்க்க

செம்பதாகைக்கு சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | 20-00 |
| அரை வருடம் | 10-09 |
| தனிப்பிரதி | 1-50 |

(தபால் செலவு உட்பட)

அனுப்பவேண்டிய முகவரி:

"செம்பதாகை"

மே/பா யாழ்ப்பாண அச்சகம்

407. ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

# யூ. என். பி. ஆட்சியின் அபிவிருத்திப் போர்வை

நமது நிருபர்

யூ. என். பி பதவிக்கு வந்தபோது இரண்டு போர்வைகளைக் கையில் எடுத்துக் கொண்டது. ஒன்று இனவாதப்போர்வை, மற்றையது அபிவிருத்திப் போர்வை. முன்னையதைக் காட்டி பெரும்பான்மையான சிங்கள மக்களின் கவனம் தன்மீது விழுவதைத் தவிர்த்து வந்தது. பின்னையதைக் காட்டி முழு நாட்டுமக்களும் நவகாலனித்துவ, பெருமுதலாளித்துவ நடைமுறைகளைக் கண்டு கொள்ளும் சந்தர்ப்பங்களைத் திசைதிருப்பி வருகின்றது. இவ்வேளை யூ. என் பி யின் அபிவிருத்திப் போர்வை பற்றி சற்று அறிந்து கொள்வது நல்லதாகும்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியானது அந்நாட்டு மக்களின் அடிப்படையான வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாக அமைதல் வேண்டும். நமது நாடு பல ஆயிரம் கிராமங்களை உள்ளடக்கிய ஒரு விவசாய நாடாகும். ஏற்றுமதித் துறைகளும் விவசாயத் தன்மை கொண்டவையே. கைத்தொழில்துறை மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. நாட்டின் மூலவளங்களை எவ்வாறு மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகப் பயன் படுத்துவது என்பதோ அல்லது கண்டு பிடிக்கப்படாத கனி வளங்களை எவ்வாறு கண்டு பிடிப்பது என்பது பற்றியோ ஒரு முறையான திட்டம் அரசிடம் கிடையாது.

நமது நாட்டின் பூகோள, சீதோஷ்ண, வரலாற்றுப் பாரம்பரிய மக்களின் வாழ்க்கைமுறை மக்களின் அடிப்படை அபிலாஷைகள், வாழ்க்கைத் தேவைகள் என்பனவற்றின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதே உண்மையான அபிவிருத்தியாகும். நாட்டு மக்களின் சொந்தப் பலத்தைக் கட்டி வளர்த்து சுய முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுத்து அந்நிய சக்திகளின் பொருளாதார அமுக்கத்திற்கு ஆளாகாது ஒரு சுதந்திர தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் உண்மையான அபிவிருத்தியாகும். அதுவே மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்யும் அபிவிருத்தியாகும்.

## நவகாலனித்துவத்திற்கு நாட்டைவிற்றுவிட்டு அபிவிருத்திபற்றி கூறுவது சுத்த ஏமாற்றே!

ஆனால் யூ. என். பி யின் அபிவிருத்தி அவ்வாறான ஒரு அபிவிருத்தி அல்ல. சுதந்திர வர்த்தக வலயமும், கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதியும் அபிவிருத்தி எனக் காட்டப் படுகின்றன. சுதந்திர வர்த்தகவலயத்தால் அந்நிய மூலதனக் காரர்கள் நமது நாட்டுத் தொழிலாளர்களின் கடும் உழைப்பால் குறைந்த சம்பளத்துடன் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர், அதேபோல் கட்டுப்பாடற்ற இறக்குமதியாலும் முதலாளித்துவ ஏகாதிபத்திய ஏகபோக சக்திகள் நம் நாட்டைத் தமது சந்தையாக்கி உள்ளன. இங்குள்ள பெரும் முதலாளிகள் அவர்களது உள்நாட்டுத் தரகர்களாக இருந்து கொள்ளை லாபம் பெறுகின்றனர். நமது நாட்டின் பணம் பெரும் பகுதி வெளியிலும் ஒரு பகுதி நம் நாட்டுப் பெரு முதலாளிகளிடமும் சென்றடைகின்றன.

உதாரணமாக ஏற்கனவே நடைமுறையில் இருந்த இ. போ. ச. சேவை தனியார் பஸ் சேவையின் அறிமுகத்தால் முடக்கப்பட்டது. இத் தனியார் பஸ் இறக்குமதிக்கு கதவு திறந்து விடப்பட்டது. யப்பானிய முதலாளிகளும் ஏனைய வெளிநாட்டு முதலாளிகளும் தமது வாகனங்களை இங்கே குவித்தார்கள். அதன் மூலம் அவர்களும் அவர்களது உள்ளூர் தரகர்களும் பணத்தைக் கொள்ளை கொள்ளையாகப் பெற்றனர். இதற்குப் பதிலாக இ. போ. ச சேவையை மக்களின் தேவைக்கு ஏற்ற விதத்தில் விஸ்தரித்திருந்தால் அதன் பலாபலன்கள் மீண்டும் மக்களுக்கே கிடைக்க வழிபிறந்திருக்கும்.

இவ்வாறே சகல இறக்குமதிகளும் மக்களுக்கன்றி தனி முதலாளிகளுக்கே வாய்ப்பளித்தது. ஆடம்பரப் பொருட்களும், பாவனைக்கு தேவையற்ற பொருள்களும் நமது நாட்டை ஆக்கிரமித்தன. தட்டுப்பாடில்லை என்று கூறப்பட்ட அதே வேளை தாராளமாக உள்ள பொருட்களை மக்கள் வாங்கிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளன. ஒரு போலித்தனமான ஆடம்பர மனப்பான்மையை யூ. என். பியால் உருவாக்க முடிந்த அதேவேளை மக்களின் வாழ்க்கைத் தரம் பலமடங்கு தூரம் கீழ்இறங்கி விட்டது.

மகாவலி அபிவிருத்தி என்ற பிரச்சாரம் திட்டநடைமுறைக்கும் மேலான ஒன்றாகவே இருந்து வருகின்றது. மகாவலி அபிவிருத்திக்கு கொட்டித்தீர்க்கப்பட்ட அந்நியக் கடன், நாட்டு மக்களை விழுங்கிய வண்ணமே இருக்கின்றன. அக்கடனில் ஒரு பகுதி பெரும் பெரும் யந்திரங்களாகவும், வாகனங்களாகவும் கிடைத்தன. இவை மட்டுமல்ல கடன் தந்தபோது பலநூறு தமது நிபுணர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும்படியும், அவர்களுக்கு பெருந்தொகைச் சம்பளங்கள் வழங்கும்படியும் நிர்ப்பந்தங்களை கடன்கொடுத்த தனவந்த நாடுகள் கட்டளை பிறப்பித்தன. அத்துடன் அரசு தனது முதலாளிகளின் லாபத்திற்காக தனிப்பட்டவர்களுக்கு பெரும் ஒப்பந்தங்களை கொடுத்தது. இவ் ஒப்பந்தகாரர்கள் தம் பைகளை நிரப்பிக்கொண்டார்களே அன்றி அபிவிருத்திக்குத் தமது பங்கைச் செலுத்தவில்லை. இவற்றுக்கு மேலால் மகாவலி அபிவிருத்தி திட்டத்தில் வீண் விரயம் லஞ்சம், ஊழல் நிரம்பி வழிந்தன. சில விலைஉயர்ந்த கட்டடச்சாமான்களை மகாவலி அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில் மிகக் குறைந்த விலையில் பெறக்கூடிய நிலையில் அபிவிருத்தி பின்னோக்கியே சென்று கொண்டிருக்கிறது.

இராம எழுச்சித் திட்டம், ஒரு லட்சம் வீட்டுத்திட்டம், பத்துலட்சம் வீட்டுத்திட்டம் பிரசாரத்தளவில் பிரமாண்டமானதாயும் நடைமுறையில் போலித்தனமான தொன்றாகவும் செயல்படுகிறது. இத் திட்டத்தால் கிராமப்புறங்களில் குடிசைச் சேரிகளுக்குப்பதில் கற்சேரிகள் உருவாகியுள்ளன. இவற்றால் ஒப்பந்தகாரர்களும், அதிகாரிகளும் தத்தமது பைகளை நிரப்பிக் கொண்டனரே அன்றி மக்கள் எதிர்பார்த்த பலனைப் பெறவில்லை.

கடந்த ஆறு வருடங்களுக்குமேல் அபிவிருத்திபற்றி ஏராளம் பிரசாரங்கள் வந்துள்ளன. திட்டங்களும் செயல்பாடுகளும் என்று பல துறைகளிலும் பேச்சு அடிபட்டன. இத்தனைக்கும் பின்பும் நமது பொருளாதாரத்தின் நிலை என்ன? பணவீக்கம் வளருகின்றது. நமது ரூபாயின் மதிப்பு செல்லாக்காசாகி வருகிறது. சம்பள உயர்வு கிடையாது. புதுப்புது வரிகள் விதிக்கப்படுகின்றன, பொருட்களின் விலைகள் நாளாந்தம் ஏறிக்கொண்டு செல்கின்றன. இவையாவும் அபிவிருத்தி என்ற அம்சத்தின் போலித்தனத்தையே அம்பலமாக்குகின்றன.

எனவே நவ காலனித்துவப் பொருளாதாரப் பிடியின் தன்மையையும், அதைப் பாதுகாக்கும் பெருமுதலாளித்துவ யூ. என். பி யின் அரசியல் அடக்கு முறைகளையும் போர்த்து மக்களை ஏமாற்றுவதற்கே அபிவிருத்தி என்ற பிரசாரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. உலகவங்கி, சர்வதேச நாணயசபை, ஏனைய முதலாளித்துவ நாடுகளிடம் அவர்கள் விதிக்கும் சகல நிபந்தனைகளுக்கும் ஆமாம் சாமி போட்டு கடன் பெறுவதால் உண்மையான அபிவிருத்தியைச் செய்ய முடியாது. அதேபோல் அபிவிருத்தி மக்களின் தேவைக்கும், வாழ்க்கைத்தர உயர்வுக்கும் இருப்பதற்கும்பதில் சில முதலாளிகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் நன்மை பயப்பதற்கு பயன்படும் ஒன்றாகவே இருந்து வருகிறது.

யூ. என். பி தனது வர்க்க ஆட்சியின் நீடிப்புக்காகப் பயன்படுத்தும் ஒரு போர்வையாகவே அபிவிருத்தி என்ற கோஷத்தைப் பயன்படுத்தி வருகின்றதே ஒழிய உண்மையான அபிவிருத்திக்கல்ல. ★

# எங்கே போகிறோம்?

ஒரு மாணவன்

அண்மைக் காலமாக எம் மாணவர் மத்தியில் வேகமாகப் பரப்பப்படுகிற படிப்பு முறை, பரீட்சைத்தயாரிப்பு போன்றவற்றைப் பார்ப்பவர்களுக்கு இந்தக்கதை ஞாபகத்துக்கு வராமல்போகாது: யார் மிகக் குறைந்த செலவில் தமது மாளிகையை நிறைத்துக்கொள்கிறார்கள் என்று, பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் ஓர் போட்டி, பாண்டவர்கள் ஒளியேற்றி, ஒளிப்பிரவாகத்தோடு ஊதுவத்திவாசனையும் மாளிகையெங்கும் வியாபித்திருக்கச் செய்தார்களாம். கௌரவர்களுக்கு வைக்கோல்தான் மலிவாகக் கிடைத்திருக்கிறது. அவர்களுடைய மாளிகையில் யாரும் உள்ளே புகமுடியாத அளவுவைக்கோல் முழு இடத்தையும் ஆக்கிரமித்துவிட்டதாம்.

இந்தக்கதையில் காட்டப்படுகிற கௌரவர்களின் முட்டாள்தனத்தையும் மேவும் வண்ணம் இன்று எம்மத்தியில் சிலரிடம் 'அறிவு முதிர்ச்சி' முண்டியடித்துக் கொண்டு முன்னேறுகின்றது. இவர்கள் தமிழ் மாணவர்களிடம் அதிக சித்தியை ஏற்படுத்தப் 'பேப்பர் அவுட்டாக்கும்' சித்தாந்தத்தைப் பரப்ப, அதைப் பணம் பண்ணத் தெரிந்தவர்கள் மிகநன்றாகப் பயன்படுத்தி இளஞ்சந்ததியிடம் அறிவுச் சூனியத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தமட்டில், ஒக்டோபர் மாதம் நடந்துமுடிந்த க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் 'பேப்பர் அவுட்' நாடகம் ஓரளவு வெற்றியென்று கேள்வி; எப்படியோ மாணவர்கள் ரோனியோ, ஃபோட்டோஸ்ரட் பேப்பர்களிலிருந்து றெடிமேட் பதில்களை அள்ளியெடுத்து வைக்கோல்களை அடைத்துவிட்ட மாதிரி சோதனை கொடுத்துவிட்டார்கள். இதை நம்பிய க.பொ.த. (சாதாரண தர) மாணவர்கள் சென்ற மாதப்பரீட்சையில் இரவிரவாக ரோனியோ, ஃபோட்டோஸ்ரட் பேப்பர்களை ஓடிப்பிடித்துவாங்கி அங்கவஸ்திரம் எங்கும் நிறைத்துக் கொண்டுபோய் பரீட்சை மண்டபத்தில் கேள்வித் தாளைப் பெற்றுக்கொண்டதும் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போலானார்களாம். அவர்கள் கொண்டு போன பதில்களைத் திணிக்கக் கூடியதாகக் கேள்வி எதுவுமே இருக்கவில்லை.

இருந்தாலும் ஒரு சில இடங்களில் 'தமிழபிமானம்' மிகுந்தபரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் பார்த்தெழுதவிட்டுத் தமிழுக்குச் 'சேவை' செய்திருக்கிறார்கள், இதற்கு அவர்களைப்பழி சொல்லிப் புண்ணியமில்லை, அவர்கள் பயமுறுத்தல்களைக் கண்டு களைத்துப்போனவர்கள்.

இது எம்மாத்திரம் என்று அசட்டை செய்வதுபோல் இன்னொரு பரீட்சைமண்டபம் உலக சாதனை நிலை நாட்டியிருக்கிறது. அது, இத்தகைய மாணவர்களை எதிர்காலத்தில் மேற்பார்வை செய்யப்போகிற ஆசிரிய மாணவர்களுக்கான பிரபல ஆசிரிய கலாசாலை ஒன்றின் பரீட்சை மண்டபம் அங்கே பரீட்சை மேற்பார்வையாளர்களே ஒரு ஆசிரிய மாணவரிடமிருந்து இன்னொருவருக்குப் பதில்களை (ஏன் புத்தகத்தைக்கூட) வாங்கி விநியோகித்திருக்கிறார்கள்.

## கல்விச் சீரழிவு கரைபுரண்டு ஓடுகிறது

இத்தகைய நடவடிக்கைகள் எமது இளஞ்சந்ததியினரிடம் ஏற்படுத்தி வரும் சிந்தனை வரட்சி கொஞ்ச நஞ்சமல்ல, இதற்குப் பரீட்சை மண்டப நடைமுறைமட்டுமே காரணமல்ல. இந்த வழிமுறையை நாடவேண்டியிருப்பதற்குக் கற்கும்முறைதான் மிகப்பெரிய காரணியாயிருக்கிறது. அது இன்றைய கல்வியமைப்பின் உடனடி விளைவாகும். இன்றைய கல்வி அமைப்பின் தவறுகளனைத்துக்கும் முத்தாய்ப்பு வைப்பதுபோல் ரியூற்றறிகள், மழைக்குமுளைத்த காளான் போல், எங்கும் வியாபித்திருக்கின்றன. அவையொவ்வொன்றும் போட்டி போட்டுக்கொண்டு 'அவுட்' டாகிய ('அவுட்டாக்கிய'?) கேள்விகளுக்குப் பதில்கள் தயாரிப்பது மட்டுமே தவறென்பதற்கில்லை அங்குள்ள கற்பித்தல்முறையே அடிப்படையில் மிகத்தவறானவைதான். அவர்கள் கேள்விகளுக்கு றெடிமேட்டாகப் பதில் கொடுக்கும் 'குளிசை'களாகப் படிப்பைக் குறுக்குவதில்தான் தமது வித்துவத்தைக் காட்டமுடிகிறது; அதில் முன்னணிவகிப்பவர்களுக்கே (கல்விச் சீரழிவுக்கு அதிகளவில் 'பங்களிப்பு' செய்கிறவர்களுக்கே) மவுசும் அதிகம்.

இந்த நிலைமை இன்று இலங்கை பூராவும் பரவலாக உள்ள ஒன்றுதான். இதனாலேயே, மூன்றுமுலக நாடுகளின் மத்தியில் கல்வித்தரத்

(8ம் பக்கம் பார்க்க)

# தோழர் மாஓசேதுங்

**வெகுஜனன்**

முதலாளித்துவ—ஏகாதிபத்திய வரலாற்றுக் காலகட்டத்தில் உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கிடைத்த மாபெரும் தலைவர்களான மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் அதுவரிசையில் இடம்பெற்றுள்ள மற்றொரு மகத்தான தலைவர்தான் தோழர் மாஓசேதுங்.

'தோழர் மாஓசேதுங் எமக்கு கிடைத்திராது விட்டால் சீனப்புரட்சியின் வெற்றி மேலும் காலதாமதமடைந்தே இருக்கும்' என்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அண்மைக்கால மதிப்பீடு மிகையான ஒருகூற்று அல்ல.

மேற்கிலே உருவாகி ரஷியாவிலே நடைமுறைக்கு வந்த மாக்சிசம்—லெனினிசம் என்ற பாட்டாளி வர்க்கத் தத்துவத்தை கிழக்கிலே மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த சீன தேசத்தில் கையேற்று, விருத்திசெய்து அதன் மூலம் சீன தேசத்தை விடுதலை செய்த சீனக் கம்யூனிஸ்டுகளது புகழ் மிக்க சாதனையின் தளகர்த்தர் தோழர் மாஓசேதுங் ஆவார்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலபிரபுத்துவ நுகத்தடியின் கீழ் அமுக்கப்பட்டு இருந்து, பின்பு பல ஏகாதிபத்தியங்களால் கூறு போடப்பட்டு அரை நிலப்பிரபுத்துவ, அரைக்காலனியில் நாடாக இருந்த சீன தேசத்தில் பாட்டாளி வர்க்கத் தத்துவத்தின் கீழ் புரட்சியை நடத்தி வெற்றி காணல் என்பது இலகுவான ஒன்றல்ல. ஆனால் சீனவரலாற்று வளர்ச்சியையும், உலக வரலாற்று வளர்ச்சியையும் மாக்சிச லெனினிசத் தத்துவ ஒளியில் பார்த்த மாஓவும் அவரது சகதோழர்களும் வரலாறு தமக்கு முன்னே வைத்த பாரிய பணியை முன்னெடுக்க திடசங்கற்பம் பூண்டனர்.

1921ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய ஸ்தாபகர்களில் மாஓசேதுங் முதன்மையானவர். அதே போல் தொழிலாளர் விவசாயிகளிலான சீனச் செஞ்சேனையை முன்னின்று உருவாக்கிய முதல்வரும் அவரே. இருபத்தியெட்டு ஆண்டுகள் தொடர்ச்சியான ஆயுதப் போராட்டத்தைப் பிரதான போராட்டவடிவமாகவும், ஏனைய போராட்ட வடிவங்கள் சகலதையும் பிரயோகித்தே சீனப் புரட்சி வெற்றிவாகை சூடியது. இக்காலகட்டத்தில் நான்கு புரட்சிகர யுத்தங்கள் இடம் பெற்றன. 1924-27 வடதிசைப் படையெடுப்பு, 1927-37 புரட்சிகர விவசாய யுத்தம், 1937-45 யப்பானுக்கு எதிரான யுத்தம், 1946-49 விடுதலை யுத்தம், என்பனவாகும். 1949ல் சீனமக்கள் குடியரசை ஸ்தாபித்து அதை உலகின் முன் பிரகடனம் செய்தவரும் தோழர் மாஓசேதுங் ஆவர்.

சீனப் புரட்சியை வெற்றிப் பாதையில் வழிநடத்திய தோழர் மாஓசேதுங்கின் தத்துவார்த்த, அரசியல்—ஸ்தாபன, யுத்ததந்திரோபாய வழிகாட்டல் என்பது சீன மக்களுக்கு மட்டுமன்றி உலகின் விடுதலை வேண்டிநிற்கும் சகல மக்களுக்கும் கிடைத்த அரிய பொக்கிஷமாகும். அதுவே மாக்சிச லெனினிசத்தின் இன்றையகால வளர்ச்சியான மாஓசேதுங் சிந்தனையுமாகும். மாக்சிசம்-லெனினிசம் உருவாகி ஏற்கனவே நடைமுறைக்கு வந்த ஒரு சூழலில் இருந்து பல வழிகளில் மாறுபட்டிருந்த சீன சமுதாயச் சூழலில் அதன் அடிப்படையம்சத்தை எவ்வகையிலும் மீறாது புதிய வழிமுறைகளைக் கண்டுபிடித்து அவற்றின் வெற்றியை உறுதிப்படுத்திய தோழர் மாஓசேதுங்கின் ஆற்றலும் ஆளுமையும் ஒரு வரலாற்றுப் பங்களிப்பேயாகும்.

தோழர் மாஓசேதுங் சீனப் புரட்சி நடைமுறையில் இருந்து மாக்சிச லெனினிசத்தின் தத்துவார்த்த வளர்ச்சிக்கு தன் பங்களிப்பைச் செலுத்தினார். அதை அவரது புகழ் மிக்கப் படைப்புக்களான; முரண்பாடுபற்றி, நடைமுறைபற்றி, மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து பிறக்கின்றன, மக்கள் மத்தியிலான முரண்பாடுகளை சரியாகக் கையாள்வது பற்றி, புதிய ஜனநாயகம் பற்றி போன்றவற்றில் குறிப்பாகக் காண முடியும்.

சீனப் புரட்சியில் இழையோடி இருந்த பிரதான அம்சம் மாஓ வகுத்த வெகுஜன மார்க்கமாகும். 'வெகுஜனங்களிடம் இருந்து வெகுஜனங்களுக்கு' என்ற கோட்பாடாகும்- உண்மையான இரும்புக் கோட்டை எது எனக் கேள்வி கிளப்பி அது கோடானகோடி வெகுஜனங்களே அன்றி வேறு எதுவும் அல்ல எனக் கூறி வெகுஜனங்களை அணிதிரட்டி கிளர்ந்தெழச் செய்து வரலாற்றின் உந்து சக்தி வெகுஜனங்கள் தான் என்பதைத் தெளிவுபடுத்தி புரட்சியை முன்னெடுத்து வெற்றி கண்டவர் தோழர் மாஓசேதுங்.

கட்சியை கட்டி வளர்ப்பதில் மாஓ உருக்குப்போன்ற கட்டுப்பாடுடைய, விமர்சனம் சுயவிமர்சன முறையைப் பின்பற்றுகின்ற, பொதுமக்களுடன் தொடர்புடைய பாட்டாளி வர்க்க கட்சியை கட்டி வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டார். உட்கட்சியில் சுதந்திரமும், ஜனநாயக மத்தியத்துவமும், பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்படும் நடைமுறையும், தவறுகள் கண்டு கொள்ளப்பட்டதும் அவை உரிய வழிகளில் திருத்தியமைக்கப்படும் முறையும், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் மரபாக இன்றும் உள்ளதென்றால் அது மாஓவின் முன் முயற்சிகளினால் உருவான ஒன்றேயாகும்.

யுத்த தந்திரோபாய ரீதியில் தோழர் மாஓவின் கோட்பாடுகள் உலகப் பிரசித்தி பெற்றவையாகும். மக்கள் யுத்தக் கோட்பாடுகள் பலவற்றைப் அவர் சீனப்புரட்சியில் பயன்படுத்தி வெற்றி கண்டார். அவர் கொரில்லாப் போர் முறையை மக்கள் யுத்தத்தின் ஒரு அம்சமாகவே அங்கீகரித்தார். எதிரி பலமாக இருக்கும்போது பின்வாங்க வேண்டும். எதிரியின் பலம் குறைவானபோது தாக்க வேண்டும், எமக்கு குறைவாகவும் எதிரிக்கு கூடுதலாகவும் இழப்புகள் இருக்கவேண்டும். பத்து விரல்களை காயப்படுத்துவதைவிட ஒரு விரலை முற்றாக வெட்டுவது சரியானதாகும். மக்கள் படையும் மக்கள் யுத்தமும் பொதுமக்களைச் சார்ந்திருக்க வேண்டும் போன்றவை மாஓவின் மக்கள் யுத்த வழிமுறைகளாகும். குறிப்பாக 'சீனாவின் புரட்சிகர யுத்தத்தின் மூல-உபாயப் பிரச்சினைகள்' என்ற 1936ல் எழுதிய கட்டுரையும், ஜப்பானுக்கு எதிரான கொரில்லா யுத்தத்தின் மூல உபாயப் பிரச்சினைகள்' என்ற 1938-ம் ஆண்டுக் கட்டுரையும் அவரது ராணுவ வழிகாட்டலுக்கு உயர்ந்ததோர் உரைக்கல்லாகும். இவற்றுக்கு மேலாகத் தோழர் மாஓ புரட்சியின் போது ஒரு விடயத்தை வலியுறுத்தினார். அதுவே கட்சி துப்பாக்கிமீது ஆணை செலுத்தவேண்டுமேஅன்றி துப்பாக்கி கட்சி மீது ஆணைசெலுத்தக் கூடாது என்பதாகும். தோழர் மாஓவின் யுத்ததந்திரோபாய வழிகாட்டல்களும், அனுபவங்களும் ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியாலும் புரட்சியாலும் தான் சரியான வழியில் பிரயோகிக்க முடியும்அன்றி முதலாளித்துவ குட்டி முதலாளித்துவக் கட்சிகளால் ஒரு போதும் நடைமுறைப்படுத்த முடியாது. சீனப் புரட்சியை வழிநடத்தி வெற்றிபெறச் செய்வதற்கு தாங்கள் பாவித்த மூன்று பிரதான ஆயுதங்கள் பற்றி தோழர் தோழர் மாஓ குறிப்பிடுகையில் பாட்டாளி வர்க்க கட்சி, அக் கட்சியின் தலைமையிலான ராணுவம், அக்கட்சியின் தலைமையிலான ஒரு ஐக்கியமுன்னணி என்றார் எனவே தோழர் மாஓவின் யுத்த வழிமுறைகள் தனியே ஆயுதத்தை கையாளும் வழிமுறைபற்றியதுமட்டுமல்ல. தத்துவம், கொள்கை, கட்சி, பொதுமக்களின் தேவை, வரலாற்றுத்தேவை என்பனவற்றுடன் பின்னிப் பிணைந்த வழிமுறைகளுமாகும்.

1949ல் சீனமக்கள் குடியரசை உருவாக்கும்போது பெறப்பட்ட புரட்சியின் வெற்றியானது புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றியே அன்றி அது ஒரு சோஷலிசப் புரட்சியின் வெற்றி அல்ல. அதாவது சீனாவின் அடிப்படையான சோஷலிச உடமை மாற்றம் 1956லேயே பூர்த்தியாக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் சீனாவின் சோஷலிச நிர்மாணத்திற்கான பொருளாதாரத் திட்டங்களை தோழர் மாஓசேதுங் மிகத் தூரதிருஷ்டியுடன் வகுத்தார். கனரகத் தொழில்துறைக்கும் மென்ரகத் தொழில்துறை,

(6ம் பக்கம் பார்க்க)

தோழர் மாஓ சேதுங் அவர்களின் 90-வது பிறந்த தினம்.

26 . 12 . 83



## தாராளவாதத்தை எதிர்த்துப் போரிடுக!

**மாஓசேதுங் - 1937 செப்டெம்பர் - 7**

நாம் ஊக்கமான சித்தாந்தப் போராட்டத்துக்காக நிற்கின்றோம். காரணம், அது நமது போராட்டத்துக்கு உதவியாக, கட்சிக்குள்ளும் புரட்சிகர ஸ்தாபனங்களுக்குள்ளும் ஐக்கியத்தை உருவாக்கும் ஆயுதமாக விளங்குகின்றது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் ஒவ்வொரு புரட்சிவாதியும் இந்த ஆயுதத்தைக் கையில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஆனால், தாராளவாதம் சித்தாந்தப் போராட்டத்தை நிராகரித்து, கோட்பாடற்ற சமாதானத்துக்காக நிற்கிறது இதன் விளைவாக உளுத்துப்போன பண்பற்ற மனோபாவம் தோன்றி, கட்சியிலும் புரட்சிகர ஸ்தாபனங்களிலுமுள்ள சில பிரிவுகளையும் தனிநபர்களையும் அரசியல் ரீதியிற் சீரழிக்கின்றது.

தாராளவாதம் பல்வேறு வழிகளில் வெளிப்படுகின்றது.

ஒருவர் தவறிழைத்து விட்டார் என்பது தெளிவாகத் தெரிந்தும், நீண்டகாலம் பழகியவர், சக ஊரவர், சக மாணவர், நெருங்கிய நண்பர், அன்பிற்குரியவர், பழைய சக ஊழியர், அல்லது பழைய கீழ்ப்பணியாளர் என்ற காரணத்தால், அவருடன் கோட்பாட்டுரீதியில் வாதிடுவதற்கு மாறாக, சமாதானத்துக்காகவும் நட்புக்காகவும் விஷயங்களை நழுவ விடுவது. அல்லது சந்தோஷமாக இருப்பதற்காக, விஷயங்களுக்குப் பூரணமான தீர்வு காண்பதற்குப் பதில், அவற்றை லேசாகத் தொட்டுவிட்டு விடுவது. இதன் விளைவாக ஸ்தாபனத்துக்கும் தனிநபருக்கும் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. இது தாராளவாதத்தின் முதலாவது வகை.

ஸ்தாபனத்துக்குத் தனது யோசனைகளை ஊக்கமாய் முன்வைப்பதற்குப் பதிலாக, முதுகுக்குப் பின் பொறுப்பற்ற விமர்சனத்தில் ஈடுபடுவது, மக்களின் முகங்களுக்கு முன் ஒன்றும் சொல்லாமல், அவர்களுடைய முதுகுகளுக்குப் பின் வம்பளப்பது, கூட்டத்தில் ஒன்றும் பேசாமல், அது முடிந்தபின் வம்பளப்பது. கூட்டு வாழ்வுக் கோட்பாடுகளைச் சற்றும் பொருட்படுத்தாமல், தனது சொந்த விருப்பத்தின்படி நடப்பது. இது இரண்டாவது வகை.

விஷயங்கள் தன்னைப் பாதிக்காவிட்டால், அவற்றை நழுவிச் செல்லவிடுவது; ஒரு விஷயம் தவறு என்பது தெளிவாகத் தெரிந்தும், அதைப் பற்றி இயன்ற அளவு சொற்பமாகப் பேசுவது; தவறு இழைக்காமற் தப்புவதற்காக ஆபத்தில்லாத முறையிற் பாதுகாப்பாய் உலகமறிந்தவர் போல நடந்து கொள்வது. இது மூன்றாவது வகை.

கட்டளைக்குப் பணிந்து ஒழுகாமற் தனது சொந்த அபிப்பிராயங்களுக்கு மேட்டிமையான இடம் கொடுப்பது. ஸ்தாபனத்திடமிருந்து விசேஷ சலுகை கோருவது, ஆனால் அதன் கட்டுப்பாட்டை நிராகரிப்பது. இது நாலாவது வகை.

ஐக்கியத்துக்காக அல்லது முன்னேற்றத்துக்காக அல்லது வேலையை நன்றாய்ச் செய்வதற்காக, தவறான கருத்துக்களுக்கு எதிரான போராட்டத்திலும் விவாதத்திலும் ஈடுபடுவதற்குப் பதிலாக, தனிநபர்த் தாக்குதல் தொடுப்பது. சண்டை சச்சரவுகள் செய்வது, சொந்தக் குரோதங்களைக் கொட்டித் தீர்ப்பது, அல்லது பழிவாங்குவது, இது ஐந்தாவது வகை.

தவறான கருத்துக்களைக் கேட்டதும் அவற்றைப் மறுத்துரைப்பதில்லை. எதிர்ப்புரட்சிவாதிகளின் கூற்றுகளைக் கேட்டாலும் கூட அவற்றைத் தெரிவிப்பதில்லை. மாறாக ஒன்றும் நடக்காதது போல் அவற்றை அமைதியாகக் கேட்டுக் கொள்வது. இது ஆறாவது வகை.

மக்கள் மத்தியில் இருந்தும், பிரசாரம் செய்யாமலும் ஊக்கமூட்டாமலும் இருப்பது, அல்லது சொற்பொழிவுகள் ஆற்றாமல் அல்லது அவர்கள் மத்தியிற் பரிசீலனைகளும் விசாரணைகளும் நடத்தாமல் இருப்பது; மக்கள் மீது பாராமுகமாகவும், அவர்கள் நல்வாழ்வில் அக்கறை இல்லாமலும், தான் ஒரு கம்யூனிஸ்டு என்பதை மறந்து, கம்யூனிஸ்டு அல்லாத சாதாரண ஒருவர் போல நடந்து கொள்வது. இது ஏழாவது வகை.

மக்களின் நலன்களுக்கு ஒருவர் தீங்கு விளைவிக்கக் கண்டும், ஆத்திரம் அடையாமல் அல்லது அவருக்கு அறிவுரை கூறாமல் அல்லது அவரைத் தடுக்காமல் அல்லது அவருடன் நியாயம் காட்டி வாதிடாமல், தொடர்ந்து அப்படிச்செய்ய அவரை அனுமதிப்பது. இது எட்டாவது வகை.

ஒரு தீர்க்கமான திட்டமோ அல்லது திசையோ இல்லாமல், அரைமனதுடன் வேலை செய்வது; கவனமின்றி ஏனோ தானோ என்ற ரீதியில் வேலை செய்வது— "பூசாரியாக இருக்கும் வரை மணியை அடித்துக் கொண்டே இருப்பது". இது ஒன்பதாவது வகை,

புரட்சிக்கு, தான் பெருஞ்சேவை செய்ததாகக் கருதி, தான் பெரும் அனுபசாலி எனத் தானே பெருமைப்படுவது; பெரிய பணிகளுக்குத் தகுதி இல்லாமல் இருக்கும் அதே வேளையில், சிறிய பணிகளை அவமதிப்பது; வேலையிற் கவனயீனமாகவும் படிப்பில் அக்கறையில்லாமலும் இருப்பது, இது பத்தாவது வகை.

தனது சொந்தத் தவறுகளை அறிந்தும் அவற்றைத் திருத்த எவ்வித முயற்சியும் செய்யாமல், தன்னைப் பொறுத்துத் தாராளவாதத்தை மேற்கொள்வது. இது பதினோராவது வகை.

நாம் மேலும் கூறிக் கொண்டே போகலாம். ஆனால் இந்தப் பதினொன்றுமே பிரதானமானவை.

இவையெல்லாம் தாராளவாதத்தின் வெளிப்பாடுகள்.

ஒரு புரட்சிகரக் கூட்டு அமைப்பிற் தாராளவாதம் என்பது பெருந்தீங்கு விளைவிக்கும் ஒன்று. இது ஐக்கியத்தை அரித்துத் தின்னும், உறவைச் சீர்குலைக்கும், வேலையில்

(5ம் பக்கம் பார்க்க)

# பிரதேச சுயாட்சியும் தேசிய இனப்பிரச்சினையும்

இமயவரம்பன்

## தீர்வுகள் யதார்த்த நிலைமைகளைத் தொட்டு நிற்கவேண்டும்

## சோஷலிசத்தின் கீழான பிரதேச சுயாட்சியும் நவகாலனித்துவத்தின் கீழானபிரதேசசுயாட்சியும்வெவ்வேறானவை

உலகில் சுரண்டல்முறை ஒழித்துக்கட்டப்படும் வரை தேசிய, இன, மத, மொழி, கலாசார அடிப்படையிலான வேறுபாடுகள் பரந்துபட்ட மக்கள் மத்தியில் முரண்பாடுகளை நீடிக்கவே செய்யும். இம் முரண்பாடுகள் சரியாகக் கையாளப்படாதவிடத்து அவற்றின் விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கும். இதுவரை உலகில் எந்த நாட்டிலுமே தேசிய சிறுபான்மை இனப் பிரச்சனை பூரணமான, திருப்திகரமான தீர்வைக் காணவில்லை, ஆயினும் சிலவில் சிறுபான்மை இன மக்கள் தம் இன, மத, மொழி, கலாசார உரிமைகள் பற்றியும் தம் தனித்துவம் பேணப்படுவது பற்றியும் அச்சங்கொள்ளாத நிலையில் உள்ளனர். முன்னெப்போதும் இல்லாதஅளவுக்கு, 1949 இன் பின்பு அவர்களது சமுதாய வளர்ச்சி ஊக்குவிக்கப் பட்டுள்ளது. பழைய முரண்பாடுகளும் தவறான சிந்தனைகளும் முற்றாகவே அழியவில்லை என்பதால் அங்கே பேரின வாதச் சிந்தனைக்கு எதிரான தளராத போராட்டத்தைத் தொடரும் அவசியம் இன்றும் இருக்கிறது எனினும், தேசிய சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மை இனத்துக்கும் இடையிலானஉறவு வேறெந்த நாட்டிலுள்ளதிலும் வெகுமளவு சுமுகமானதே எனலாம்.

சோவியத் யூனியனில் தேசிய இனப் பிரச்சனை சீனாவிலுள்ளதினின்று வேறுபட்டது. அங்கு அப் பிரச்சனையையிட்டு லெனின், ஸ்டாலின் ஆகியோரது காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாகவே இன்றும் தேசிய இனங்கட்கு இடையிலான உறவுகள் ஓரளவு சுமுகமாக உள்ளன. ரஷ்ய பேரினவாதத்தின் தாக்கம் அண்மைக் காலங்களில் பலமுறை தலைதூக்கியுள்ளது எனினும் பல மேலை நாடுகளுடன் ஒப்பிடுகையில் இன உறவுகள் அங்கு சுமுகமானவையே. யூகோஸ்லாவியாவின் சமஷ்டி முறையின்கீழ் பல்வேறு தேசிய இனங்கட்கிடையிலான பல பிரச்சனைகள் அந்த நாடு விடுதலை அடைந்தபின்பு மிகவும் சிநேகபூர்வமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன. முரண்பாடுகள் சில சமயம் உக்கிரமடைந்தாலும் அவை இனப் பகையாக வளராதவாறு பேணப்பட்டுள்ளன.

மேலைநாடுகளில் கூட சில நாடுகளில் இனப் பிரச்சினை அடிப்படையில் ஓரளவு திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. எனினும் பொருளாதார நிலைமைகள் சீரழியும்போது தேசிய இனங்களிடையே பகைமையான போக்குகள் தலைதூக்குவதும் குறிப்பாக அயல் நாடுகளிலிருந்து வந்த தொழிலாளர் பேரின்ரோர் பாதிப்புக்குட்படுவதையும் பல ஐரோப்பிய நாடுகளில் கண்டிருக்கின்றோம்.

தேசிய இனப் பிரச்சனை ஒப்பிநிலையில் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ள நாடுகளில் எல்லாம் ஒரேவிதமான தீர்வுகள் காணப்படவில்லை. ஒரே விதமான அரச நிர்வாக முறையையுடைய நாடுகளில் எல்லாம் பிரச்சனைகள் ஒரே மாதிரியான அளவு திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை.

ஒரு நாட்டின் தேசிய இனப் பிரச்சனையை அதன் சமுதாயச் சூழலில்,வரலாற்று அடிப்படையில் அணுகத் தவறும் போதுதான் குருட்டுத்தனமான தீர்வுகள் வழங்கப்படுகின்றன. ஒற்றையாட்சி, சமஷ்டி, மாநில சுயாட்சி, பிரதேச சுயாட்சி, பிரிவினை, பிரிந்துபோகும் உரிமையுடனான சுயாட்சி என்பன ஒவ்வொன்றுமே சரியான சூழலில் வைத்து ஆராயப்படாதபோது அர்த்தமற்ற சூத்திரங்களாகி விடுகின்றன.

வங்காளதேசப் பிரிவினையை நினைத்து அதுபோல் இங்கும் நடக்கும் என்று கணக்குப் போட்டவர்களால் பல இளைஞர்கள் அரசியலில் வழிதவறிப்போனார்கள். இன்றும் கூட சைபிரஸில் துருக்கியின் ஆதரவுடனான பிரிவினைக் கிரெனடாவில் அமெரிக்க ஆக்கிரமிப்பு ஆகியவற்றை நினைத்துக் கொட்டாவி விடுகிறதன்மை இருக்கவே செய்கிறது.

இலங்கையில் தமிழரசுக் கட்சி 1949 முதல் 1970வரை சமஷ்டி கேட்டபோது மலையக மக்களது நிலை பற்றியோ, கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம்கள் பற்றியோ ஆழமான சிந்தனையின் பேரில் அதைக் கேட்கவில்லை. 'ஸ்விற்சர்லாந்து இலங்கையிலும் சிறிய நாடு அங்கே சமஷ்டி உண்டு' 'கனடாவில் சமஷ்டி உண்டு' என்கின்ற மாதிரியான வாதங்களே முன்வைக்கப்பட்டன. இலங்கையில் இன்று நிலைமை மேலும் சிக்கலாகிவிட்டது. சமஷ்டி ஆட்சி என்பது, மத்தியஅரசிடம் உள்ள ஒரு சில அதிகாரங்கள் போக, மற்றப்படி, பெரும் அதிகாரங்களைக் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளின் இணைப்பு என்ற கருத்திலேயே அன்று கோரப்பட்டது. சமஷ்டி அரசுகளின் அதிகாரங்கள் பற்றி, இலங்கையில் உள்ள சூழலில், நியாயமான அச்சங்கள் பல, நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளன. ஒற்றையாட்சியில் அரசின் கையில் அதிகாரங்கள் குவியும்போது அது தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்குப் பாதகமாகவும் சிறுபான்மைஇனங்களது இன, மத, மொழி, கலாசார, பிரதேச உரிமைகட்கு மிரட்டலாகவும் அமைவது உண்மை. ஆனால் அதற்குரிய தீர்வு சமஷ்டியாகவே இருக்கவேண்டியதில்லை. இலங்கையின் மார்க்ஸிஸ லெனினிஸவாதிகள் இதுபற்றிய தமது நிலைப்பாட்டில் அன்று முதல் இன்று வரை மிகவும் தெளிவாகவே இருந்துள்ளனர். திரிபுவாதிகள் கூட, அவர்களது சந்தர்ப்பவாத அரசியல் தேசிய இனப் பிரச்சனையின் சில காலகட்டங்களில் அவர்களைத் திசை தவறச் செய்த போதிலும், அதிகாரங்கள் பிரதேச வாரியாகப் பரவலாக்கப்படுவதன் அவசியத்தை இன்னமும் ஒப்புக்கொள்ளவே செய்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு 1956இல் தமிழ் மக்களிடையே பரவலான ஆதரவு பெற்றபோது சோனக முஸ்லிம் மக்களிடையே சில அச்சங்கள் எழுந்தன. தமிழ்பேசும் மக்களது சமஷ்டியில் தாம் ஒரு சிறுபான்மை இனமாகப் புதிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டும் என அவர்கள் அஞ்சினர். சோனக மக்களில் பெரும்பான்மையினர் இலங்கை முழுவதும் பரவி வாழ்கின்றனர். எனவே சமஷ்டி ஆட்சி அவர்களது நிலையை ஸ்திரமற்றதாக்கும் என்ற நியாயமான அச்சத்தைத் தமிழரசுக் கட்சி சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. சிங்களப்பேரின வாதத்திற்கு எதிராகத் தாம் பாவித்த வாதங்களே சோனகர்கட்கும் தமிழ்மக்கள் விஷயத்தில் பொருந்தும் என்பதையோ தமிழரசுக்கட்சி கேட்ட சமஷ்டி இப் பிரச்சனையைத் தீர்க்காது என்பதையோ தமிழரசுத் தலைமை சரியாகக் கவனித்ததில்லை. மலையக மக்களது நிலையும், இதுபோன்றே, மேலும் அனாதரவானஒன்றாகி விடும் என்பதும் கணிப்பில் எடுக்கப்படவில்லை. தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை தமிழர்களது (முக்கியமாகத் தமிழ் உயர்-நடுத்தர வர்க்கங்களது) அரசியல் பிரச்சனைக்கு அப்பால் சிறுபான்மை இனப் பிரச்சனையே கிடையாது. இதன் காரணமாக அவர்கள் தமிழ்மக்களது நியாயமான போராட்டங்களைப் பலவீனப்படுத்தினர்.

இதற்கு மாறாக பிரதேச சுயாட்சி ஆலோசனை கம்யூனிஸ்ட் கட்சியால் முன்வைக்கப்பட்டபோது பல்வேறு விஷயங்கள் கணிப்பில் எடுக்கப்பட்டன. அதுமட்டுமன்றி பிரதேச சுயாட்சி என்பது ஒரு விறைப்பான கண்ணோட்டத்தின்மீது கட்டியெழுப்பப்பட்ட ஒன்றல்ல. சுயாட்சிக்குரிய பிரதேசம் அப்பிரதேசத்தின் பெருவாரியான மக்களது விருப்பின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதோடு அப்பிரதேசத்தில் உள்ள பிற இனப்பிரிவுகளது நிலைமையையும் கணிப்பில் எடுக்கவேண்டும். எனவே பிரதேச சுயாட்சி என்பது இலங்கையின் இனப்பிரச்சனை வெறுமே தமிழர் சிங்களவர் பிரச்சனை மட்டுமே என்ற அடிப்படையில் அமையக் கூடாது. அதேசமயம் சுயாட்சிப் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் ஒரு இனம் அல்லது இனப்பிரிவுக்குட்பட்டதாகவே அமையவேண்டும் என்பது நடைமுறைச்சாத்தியமானது அல்ல. எனவே தொகுதி அல்லது அதற்கும் குறைவான பிரதேச மட்டத்தில் பரந்துபட்ட மக்களது தேவைகளையும் விருப்புக்களையும் அறிந்து அதன் அடிப்படையில் சமுதாய பொருளாதார ரீதியாகப் பொருத்தமான முறையில் சுயாட்சிப் பிரதேசங்கள் அமைக்கப்படுவது பயனுள்ளது.

பிரதேச சுயாட்சியின் நோக்கம் மக்களை மேலும் பிரிப்பதல்ல. மாறாக அவர்களை ஒன்றுபடுத்துவதே. திட்டமிட்ட இனவாத அடிப்படையிலான குடியேற்றம் போன்றவை தேசிய இன உறவுக்குச் செய்யும் கெடுதலை பிரதேசசுயாட்சி தடுக்கும். அதன் கருத்து மக்கள் ஒரு பிரதேசத்தினின்று இன்னொன்றுக்குப் பெயர முடியாது என்பதல்ல. ஆனால் ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களது நலனுக்குப் பாதகமான முறையில் திட்டமிட்ட குடியேற்றம் நடக்காமல் தடுக்க முடியும்.

பிரதேச சுயாட்சி என்பது வெவ்வேறு இன மக்களுக்குப் பாரம்பரியமான பிரதேசங்கள் இருப்பதை மதிக்கிறது. ஆனால் அவை தனி நாடுகளைப் போன்றன எனும் முறையில் அவற்றை முக்கியப்படுத்துவதில்லை.

மேலும், சுயாட்சிமுறையானது தேசிய அரசின் பாரபட்சம், தலையீடு போன்றவற்றின் பாதிப்புகளைத் தணித்துப் பிரதேசங்களின் தொழில், கல்வி மற்றும் வகைகளில் அபிவிருத்திக்கு ஊக்கமளிக்கின்றது.

சோஷலிஸ முறையொன்றின் கீழ் பிரதேச சுயாட்சி தரும் பலன்களை நவகாலனித்துவ சமுதாயத்தில், படுபிற்போக்கான ஆட்சிமுறையின் கீழ் நாம் எதிர்பார்க்க முடியாது. எனினும் தேசிய இனப்பிரச்சினை மேலும் மோசமான நிலையை அடையாது தடுக்கவும் தேசிய ஒற்றுமையையும் சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகளையும் பேண இன்றைய சூழ்நிலையில் பிரதேச சுயாட்சி ஒரு நல்ல தற்காலிகமான தீர்வின் முக்கியமான அம்சமாகும். ★

## தாராளவாதத்தை……

4ம் பக்கத் தொடர்

ஊக்கமின்மையை ஏற்படுத்தும், வேற்றுமையை விதைக்கும் ஒரு நச்சுத் திரவம். இது புரட்சிகர அணிகளிலுள்ள கட்டுக்கோப்பான ஸ்தாபன அமைப்பையும் கண்டிப்பான கட்டுப்பாட்டையும் அழித்து விடுகின்றது; கொள்கைகள் பூரணமாய் அமுல் நடத்தப்படுவதை இது தடுக்கின்றது; கட்சியின் தலைமையிலுள்ள மக்களிடமிருந்து கட்சி ஸ்தாபனங்களைப் பிரித்து விடுகின்றது. இது மிகத் தீமையான ஒரு போக்காகும்.

தாராளவாதம் என்பது குட்டி பூர்ஜுவா வர்க்க சுயநல உணர்விலிருந்து தோன்றுகின்றது. இது தனிநபர் நலன்களை முதலாவது இடத்திலும் புரட்சியின் நலன்களை இரண்டாவது இடத்திலும் வைக்கின்றது. ஆகையாற் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஸ்தாபனரீதியிலும் தாராளவாதம் தோன்றுகின்றது.

தாராளவாதிகள் மார்க்ஸிஸக் கோட்பாடுகளைச் சூட்சுமமான வரட்டுத் தத்துவமாகக் கருதுகின்றனர். அவர்கள் மார்க்ஸிஸத்தை அங்கீகரிக்கின்றனர்; ஆனால் அதை அனுஷ்டிக்க அல்லது பூரணமாக அனுஷ்டிக்கத் தயாராக இல்லை: தமது தாராளவாதத்துக்குப் பதிலாக, அதன் இடத்தில் மார்க்ஸிஸத்தை வைக்கவும் அவர்கள் தயாராக இல்லை. அந்த நபர்களிடம் மார்க்ஸிஸம் இருக்கும் அதே வேளையில் தாராளவாதமும் இருக்கின்றது. அவர்கள் மார்க்ஸிஸம் பேசுகின்றனர். ஆனால் தாராளவாதத்தை அனுஷ்டிக்கின்றனர். பிறருக்கு மார்க்ஸிஸத்தையும் தமக்குத் தாராளவாதத்தையும் பிரயோகின்றனர். அவர்கள் இரண்டு விதமான சரக்குகளையும் இருப்பில் வைத்து, இரண்டுக்கும் உபயோகம் காண்கின்றனர். இப்படித் தான் சில நபர்களின் மூளைகள் வேலை செய்கின்றன.

தாராளவாதம் என்பது சந்தர்ப்பவாதத்தின் ஒரு வெளிப்பாடு. மார்க்ஸிஸத்துடன் அடிப்படையில் முரண்பாடானது. இது ஊக்கமற்ற தன்மை உடையது. யதார்த்தத்தில் அதன்விளைவு எதிரிக்கு உதவி செய்வதாகும். எனவே தான் அது நம் மத்தியில் இருப்பதை எதிரி வரவேற்கிறான். அதன் இயல்பு இப்படி இருப்பதால், புரட்சி அணிகளிற் தாராளவாதத்துக்கு இடமே இருக்கக் கூடாது.

ஊக்கமற்ற தாராளவாதத்தை வெற்றிகொள்ள மார்க்ஸிஸத்தின் ஊக்கமான உணர்வை நாம் உபயோகிக்க வேண்டும். கம்யூனிஸ்ட் ஒருவர் விசால உள்ளம் படைத்தவராக இருக்க வேண்டும். அவர் விசுவாசமும் ஊக்கமும் உடையவராக இருக்கவேண்டும். புரட்சியின் நலன்களைத் தனது சொந்த உயிரைவிடப் பெரிதெனக் கருதவேண்டும். "தனது தனிநபர் நலன்களைப் புரட்சியின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். எங்கும் எப்பொழுதும் அவர் சரியான கோட்பாட்டின் வழி ஒழுகி, தவறான கருத்துக்கள், செயல்கள் எல்லாவற்றுக்கும் எதிராகச் சளையாத போராட்டம் நடத்த வேண்டும். இவ்வாறு, கட்சியின் கூட்டு வாழ்வை ஸ்திரப்படுத்தி, கட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் பலப்படுத்த வேண்டும், அவர் எந்த ஒரு தனி நபரிலும் பார்க்கக் கட்சியிலும் மக்களிலும் கூடுதலான அக்கறையும் தன்னை விடப் பிறர் மீது கூடுதலான அக்கறையும் செலுத்த வேண்டும். இப்படிச் செய்தாற் தான் அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்று கருதப்படமுடியும்.

விசுவாசமான, ஒளிவுமறைவற்ற, ஊக்கமான, நேர்மையான கம்யூனிஸ்டுகள் அனைவரும் ஐக்கியப்பட்டு, நம் மத்தியிலுள்ள சில நபர்கள் காட்டும் தாராளவாத சுபாவங்களை எதிர்த்து, அவர்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். இது நமது சித்தாந்த முனையில் உள்ள கடமைகளில் ஒன்றாகும். ★

# கைலாசபதியும் விமர்சனப் பிரச்சினையும்

**கடந்த டிசம்பர் 18ம் திகதி யாழ்-வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கைலாசபதி முதலாண்டு நினைவு தினச் சொற்பொழிவில் பேராசிரியர் சி- சிவசேகரம் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.**

கீழைத் தேசங்களைக் காட்டிலும் மேற்குலகம் சில நூறு ஆண்டுகளுக்கு முந்தியே 'மறு மலர்ச்சியைக்' கண்டுவிட்ட வரலாறு கொண்டவை. அதன் உடனடி விளைவாக நவீன கலை—இலக்கியப் போக்கும் விமர்சனக் கண்ணோட்டமும் அங்கு பெரிதும் வளர்ச்சி பெற்றதாயிருந்தது. இக்காரணத்தால் கீழைத்தேச இலக்கிய கர்த்தாக்கள், விமர்சகர்கள் பலருக்கு மேற்குலகம் முன்னோடிகளை வழங்கியதையும் நாம் காணலாம். இதற்கு கைலாசபதி அவர்களும் விதிவிலக்கல்ல.

அவர் ஆங்கிலமுற்போக்கு இலக்கிய விமர்சகர்களை முன்னுதாரணமாகக் கொள்ளும் தவிர்க்கமுடியாத சூழ்நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அத்தகைய முன்னுதாரணத்தை அவர் எந்தக் கண்ணோட்டத்தில் அணுகி தமிழிலக்கியத்துக்குப் பிரயோகித்தார் என்பதே பிரதானமானதாகும். இது பற்றிச் சொல்ல வரும்போது எனக்கு ஒரு சிங்கள நாடோடிக் கதை ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு வைத்தியர் தனது சிஷ்யருடன் வயிற்றுவலியால் அவஸ்தைப்பட்ட நோயாளி ஒருவரின் நாடியைப்பிடித்துப் பார்த்து, 'இது சாதாரணமான சமியாக் குணந்தான்; நீங்கள் கொஞ்சம் அதிகமாக மாம்பழம் சாப்பிட்டுவிட்டீர்கள்" என்றுகூறி மருந்து வழங்கிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தவேளை சிஷ்யருக்கு ஒரே ஆச்சரியம்; 'நாடிபிடித்துப் பார்த்து சமியாக்குணம் என்று கண்டுபிடித்தது சரிதான், அவர் மாம்பழந்தான் சாப்பிட்டார் என்று எப்படி அறிந்தீர்கள்?" என வைத்தியரிடம் அச் சிஷ்யன் கேட்டான். வைத்தியர் சொன்னார் "இது மிக எளிது இப்போது மாம்பழக் காலம், கட்டிலடியில் நோட்டம்விட்டேன், மாம்பழத்தோல் மாங்கொட்டைகள் இருந்ததைக்கண்டேன். அதைவைத்தே அப்படிக் கூறினேன்' என்றார். இன்னொருதடவை வைத்தியரால் போகமுடியாத நிலையில் ஒரு நோயாளியைப் பார்வையிட அவர் தன் சிஷ்யரையே அனுப்பிவைத்தார். அதுவும் வயிற்றுவலிதான். நாடிபிடித்துப்பார்த்துக்கொண்டே கட்டிலடியில் நோட்டம்விட்டார் சிஷ்யர். அங்கே வைக்கோல் இருக்கக் காணப்பட்டது. உடனே நோயையும் நோய்க் காரணத்தையும் கண்டுபிடித்த திருப்தியுடன் சிஷ்யர் சொன்னார் 'இது சாதாரணமான சமியாக்குணந்தான்; நீங்கள் கொஞ்சம் அதிகமாகவே வைக்கோல் சாப்பிட்டுவிட்டீர்கள் எல்லாம் சரிவந்துவிடும்' என்றார்.

இவ்வாறான இடங்காலமறியாத 'முன்னுதாரணங்கள்' ஒருபோதும் சரிப்பட்டு வராது. இதற்கு மாறாக விஷயங்களை ஒரு விஞ்ஞான அடிப்படையில், ஆய்ந்தறிந்து பிரயோகிக்கும் கண்ணோட்டத்தை கைலாசபதி கொண்டிருந்ததாலேயே மேற்குலகக் கண்டுபிடிப்பையெல்லாம் சரியான முறையில் தமிழிலக்கியத்தில் பிரயோகித்து வெற்றி பெற முடிந்தது.

இந்தவகையில் தான் அவர்தனது கலாநிதிப்பட்டத்துக்கான ஆய்வில் சங்ககால இலக்கியத்தைக் கிரேக்க இலக்கியத்துடன் ஒப்பிட்டு ஓர் பிரமாண்டமான மாற்றத்தை ஏற்படுத்தியிருந்ததை நாம் பார்க்கவேண்டும். இது உண்மையிலேயே ஒரு பிரமிக்கத்தக்க சாதனை. பொதுவாக மருத்துவம், இரசாயனம், பௌதிகம் போன்ற விஞ்ஞானத்துறையில் நாம் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொள்வதற்கு முன்வந்தால் எம்மை மேற்குலகப் பேராசிரியர்கள், பல்கலைக்கழகங்கள் மகிழ்வோடு வரவேற்பதுண்டு. ஆனால் கைலாசபதியோ தமிழ் இலக்கியத் துறையில் அதனைச் சாதித்துள்ளார்.

அதிலும் சங்ககால இலக்கியத்தை அவர் தேர்ந்தெடுத்தது வித்தியாசமான ஒன்றாகும். சங்ககால இலக்கியமென்றால் அவற்றில் எத்தனை 'தாமரை', 'மாங்காய்' என்றசொற்கள் வந்தனஎன்று ஆய்வுசெய்யப்பட்ட காலத்தில் கைலாசபதி ஒப்பியல் இலக்கியத்துக்கு முன்னுதாரணங் காட்டினார் என்பதுதான் முக்கியம்.

இவ்வாறு ஒரு முன்னோடியாக விளங்கிய அவர் பல கண்டன விமர்சனங்களுக்கும் இலக்காகியிருக்கிறார். அது அவருக்குப் பெருமை தரக்கூடிய விஷயந்தான். அவர் தவறுகள் செய்திருக்கிறாரா என்றால் அவர் ஒரு போதும் வெறும் ஊகங்களைச் சொல்வதை விடுத்து, எப்போதும் நடைமுறைப் பரீட்சார்த்தத்துக்குரிய கருத்துக்களையே வெளியிட்டார் என்பதுதான் காரணமாகும். அவருடைய சில முடிவுகளிலுள்ள தவறுகளை வைத்து அவரே தவறென முத்தாய்ப்புவைப்பது முட்டாள்தனமானதாகும். இன்று டார்வின்கோட்டாடுகளில் சில தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உதாரணமாகப் பரிணாமவளர்ச்சி படிப்படியாக நிகழ்ந்து ஒரு உயிரியிலிருந்து புது உயிரி தோன்றுகிறது என்ற முடிவானது, படிப்படியான வளர்ச்சியைத் தொடர்ந்து ஒரு பாய்ச்சல் ஏற்படுவதாலேதான் புது உயிரி பிறப்பிக்கப்பட முடியும் என்பது கண்டு. காட்டப்பட்டிருக்கிறது. இதைக் கண்டதுமே பைபிள் சொன்னதை மறுத்த டார்வின் தொலைந்தார், இதற்குமேல் என்ன, பைபிள் கோட்பாடுசொல்வது போல் ஏழுநாளில் சகலதும் படைக்கப்பட்டதென்பதை மறுக்கமுடியுமா என்று கேட்போரும் இருக்கிறார்கள். மாறாக, புதிய கோட்பாடு டார்வினை நிராகரிக்கவில்லை, டார்வினை வளர்த்திருக்கிறது. டார்வின் அதைக் கண்டுபிடிக்காதிருந்தால் இந்தவளர்ச்சியும் சாத்தியமில்லை.

இதுபோலவே கைலாசபதியின் ஆய்வு முறையையும் நாம் பார்க்கவேண்டும். ஒரு ஆய்வாளனின் தவறுகள் மூன்று காரணங்களால் ஏற்படமுடியும். ஒன்று, போதிய தகவல்கள் கிடைக்காமையால் ஏற்படுவன, இரண்டு, அடிப்படையான உலகக்கண்ணோட்டம் காரணமாக ஏற்படக்கூடியன. மூன்று, அவருடைய சொந்தமுடிவுகள் காரணமாக ஏற்படுவன.

இவற்றில் கைலாசபதியைத்தவறுகாண முயல்வோர் அவருடைய தவறுக்கான அடிப்படை அவருடைய உலகக்கண்ணோட்டமாகிய மார்க்ஸிஸம் காரணமானதே எனக் காட்ட முயல்கிறார்கள். அது முற்றிலும் தவறான தோர் வீண் முயற்சியாகும். அவ்வாறே அவருடைய ஆற்றலிலும் தவறு சொல்ல முடியாது. உண்மையில் அவருடைய தவறுகள் தரவுகளின் போதாமையினால் ஏற்பட்டமையாகவே இருக்கமுடியும். இதனாலேதான் அவருடைய அடிப்பயையான விமர்சனப் பிரச்சினைகள் சரியாக இருக்க சில குறிப்பான விடயங்களில் தவறு ஏற்பட்டிருக்கலாம் என்றே கூறவேண்டும். மொத்தத்தில் கைலாசபதி தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்திவிருக்கக்கூடிய தாக்கமும் அதன்மூலம் அவர் ஆற்றிய சேவையும் எவராலும் மறுக்கமுடியாதவையாகும்.

இவ் நினைவுதினச் சொற்பொழிவிற்கு திரு. அ. ஜெயரட்ணம் தலைமை தாங்கினார். மேலும் திருமதி சித்திரலேகா மௌனகுரு, என். இரவீந்திரன் கே. செந்திவேல் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

★

## உதிரம் சிவக்கிறது!

★

உடையார் வளவில்
ஓரத்தில் ஒரு ஒதுக்கில்
ஒருபிடி மண்ணுக்கும்
உரிமையற்று
ஒட்டி இருந்து
அவர் வாழ
ஓடாய் உழைத்த
உருக்குலைந்த பரம்பரையின்
உதிரத்தில் வந்தவர் நாம்
ஒன்றுபட்டு நிற்கின்றோம்.
கொட்டில் பிடுங்கி
எம்மைக் குடியெழுப்பி
அகதிகளாய்
தெருவில் விட
ஆண்ட பரம்பரையின்
அடிச்சுவட்டில் வந்துதித்த
உடையாரின் வழித்தோன்றல்
படையுடனே வருகிறார்.

மண்ணுக்கே யுழைத்து
மாண்ட பரம்பரைக்கு
மண்ணிலே பற்று
மனதில் இறுகிறது
எங்கள் முகங்களில்
உதிரம் சிவக்கிறது
அந்த ஒளியினில்
மலர்கிறது தேசியம்.

—தணிகையன்

நன்றி
தாயகம்

# தோழர் மாஓசேதுங்

4-ம் பக்கத் தொடர்...

விவசாயத்துறை ஆகியவற்றுக்கிடையிலான உறவை அவர் தெளிவாக வரையறை செய்தார். சுய முயற்சிகளுக்கும், சொந்தக்கால்களில் தங்கி நிற்பதற்கும் அவர் முதலிடம் கொடுத்த அதேவேளை வெளிநாடுகளின் சிறந்த அனுபவங்களை, சீன நிலைமைகளுக்கு ஏற்ப பெற்றுக்கொள்ளவேண்டும் என்றார். மேற்கின் முன்னேறிய விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் சீன எல்லைகளுக்குள் ஒருபோதும் நுழையக்கூடாது என மாஓ கூறியது கிடையாது. சீன தேசம் பரந்த நிலப்பரப்பையும் சகலவித கனிவளங்களையும் உற்பத்திக்கான வாய்ப்புகளையும் உடைய ஒரு தேசம் மட்டுமன்றி உலகிலேயே அதிக சனத்தொகையுடைய ஒரு நாடுமாகும். ஆனால் உலகின் முன்னேறிய விஞ்ஞான தொழில்நுட்ப கைத்தொழில் நாடுகளுடன் ஒப்பிடுகையில் அது ஒரு பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஆதலா சீனம் முன்னேறிய கைத்தொழில் விவசாய நாடாமாறுவதை மாஓ எப்பொழுதும் விரும்பினார். இது சீன மக்களுக்கு மட்டுமன்றி முழு மனித குலத்திற்கும் சீனம் வழங்கும் பங்களிப்பு எனவும் கருதினார். மாஓவின் சரியான சோசலிசப் பொருளாதாரத் திட்டங்கள் துரதிஷ்டம் காரணமாக நிறைவேறமுடியவில்லை. அவரது காலத்தில் நடைமுறைக்கு வரமுடியாதவற்றையும், நடைமுறைப் படுத்த தவறியதையுமே இன்று சீனாவில் நடைமுறைப் படுத்துகிறார்கள்.

தோழர் மாஓசேதுங்கின் வரலாற்றுப் பாத்திரத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாக்சிச விஞ்ஞான கண்ணோட்டத்தில் ஆராய்ந்து மாஓசேதுங் சிந்தனையை தமது எதிர்கால வேலைகளுக்கான தத்துவமாக ஏற்றுக் கொண்டுள்ளது. தோழர் மாஓ மகத்தான தலைவர், மாபெரும் மாக்சிசவாதி, சிறந்த யுத்ததந்திரவாளன், சிறந்த ஆசிரியர் உயர்ந்த தத்துவவாதி என சீனக் கம்யூனிஸ்ட்கட்சி முடிவு கொள்கிறது. அதேவேளை தோழர் மாஓவின் கடைசிக்காலத் தவறுகளை சுட்டிக்காட்டவும் அத்தவறுகளை திருத்திக்கொள்ளவும் அது பின்நிற்கவில்லை. இது தவறுகள் எப்பொழுதும் மூடிக்கட்டி மறைப்பதற்குரிய ஒன்றல்ல என்ற உண்மையான மாக்சிசக் கண்ணோட்டத்தையே கொண்டுள்ளது.

ஒருவருடைய சாதனைகளையும், குறைபாடுகளையும் மாக்சிசக் கண்ணோட்டத்தில் எவ்வாறு அணுகவேண்டும் என்பதைத் தோழர் மாஓவே தனது காலத்தில் வகுத்துத் தந்துள்ளார். ஒருவரின் சாதனைகளையும் குறைபாடுகளையும் 70—30வீத அளவில் வைத்துக் கணிப்பீடு செய்தல் வேண்டும் என வலியுறுத்தினார். 'நூற்றுக்கு நூறு சரியானவர்' 'தவறுகளே விடாதவர்' என்று கூறப்படுவதும் 'நான் சொன்னால் சரி' 'நான் தவறாக எதையும் கூறுவதில்லை' என்ற தன்னகங்காரச் சொற்றொடர்களும் மாக்சிசநிலைப்பாடுகள் அல்ல என மாஓவினால் நிராகரிக்கப்பட்டவையாகும். தோழர் மாஓவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் தோழர் ஸ்டாலினின் வரலாற்றுப் பாத்திரத்தை இந்த மாக்சிச விஞ்ஞானக் கண்ணோட்டத்திலேயே மதிப்பீடு செய்தனர் என்பதைச் சிலர் புரிந்துகொள்வதில்லை. தோழர் மாஓவின் சாதனைகளுக்கு முதலிடமும் அவரது குறைபாடுகளுக்கு இரண்டாம் இடமும் வழங்கியுள்ள சீனக் கம்யூனிஸ்ட்கட்சி தொடர்ந்து மாஓசேதுங் சிந்தனையை தமது வழிகாட்டும் தத்துவமாக ஏற்று செயல்பட்டு வருகின்றது. கட்சியின் 12வது காங்கிரஸ் நான்கு அடிப்படைகளினால் நாடும் மக்களும் வழி நடத்தப்படுவதை உறுதிப் படுத்தி உள்ளது. 1—சோசலிசப் பாதை, 2—மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்) 3—கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை. 4—மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை என்பனவாகும். இந்த நான்கு அம்சங்களும் தோழர் மாஓவின் லட்சியங்கள் விருப்பங்களுக்கு முற்றிலும் இயைபானவைகளேயாகும். இதிலிருந்து தோழர் மாஓசேதுங் எவ்வளவு தூரத்திற்கு சீன மக்கள் மத்தியில், சீனக் கம்யூனிஸ்ட்டுகள் மத்தியில் சிரந்தரமாக வாழ்ந்து வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

தோழர் மாஓவிற்கு இறக்கும்போது வயது எண்பத்திமூன்றாகும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்ட 1921-லிருந்து கணக்கிட்டால் சரியாக அரைநூற்றாண்டுக்கு மேல் (55 வருடங்கள்) சீன மக்களின் விடுதலைக்காக, உலக மக்களின் விடுதலைக்காக ஓய்வுறக்கம் இன்றி உழைத்தவர் மாஓசேதுங். சீனப்புரட்சியின் அனுபவங்களும், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் அனுபவங்களும் தோழர் மாஓவினால் மாக்சிசம்—லெனிசத்திற்கு செழுமையான வழங்கல்களை அளிக்க உதவியது. அதுவே மாக்சிச லெனினிசத்தின் வளர்ச்சியான மாஓசேதுங் சிந்தனையாக நமது காலத்திற்கு கிடைத்தது.

மாக்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனையின் உண்மையான தன்மைகளை நமது நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்றவிதத்தில் நடைமுறைப் படுத்தும் கட்சி ஸ்தாபன—அரசியல் வேலைகளை முன்னெடுக்க தோழர் மாஓவின் 90வது பிறந்ததினத்தில் மேலும் திடசங்கற்பம் செய்மாக.

★

# தோட்டத்தொழிலாளர்கள் அடிமைகள் அல்லர்!

## அவர்கள் அந்நியச் செலவாணியின் எஜமானர்கள்!

அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய எஸ். டி. பண்டாரநாயக்கா இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை அடிமைகள் என அர்த்தப்படுத்திக் கூறியுள்ளார். இது உண்மையில் அரசியல் அறனை கண்ட ஒரு சந்தர்ப்பவாதியின் பேச்சாகமட்டுமே இருக்க முடியும்.

நமது நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்துறையில் பிரதானமான தேயிலை இறப்பர் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களது கடுமையான உழைப்பின் மூலமே நமது நாடு கோடிக்கணக்கில் அந்நியச் செலாவணியைத் தேடிக் கொள்கிறது. அப்படி இருந்தும் அத்தொழிலாளர்களுக்கு உரிய சலுகைகளையும் உரிமைகளையும் ஆளும் வர்க்கமாக உள்ளவர்கள் மறுத்தே வருகின்றனர். அவர்கள் சொல்லமுடியாத கஷ்டங்களுக்கு, புறக்கணிப்புகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். இந்த நாட்டின் பிரதான பொருளாதாரத் துறையில் அவர்கள் வேலை செய்த போதிலும் அவர்களது பங்களிப்பை ஆளுவோரும், பேரினவாதிகளும் அங்கீகரிக்க மறுக்கின்றனர். அவர்களை இழிவாகவும், ஏளனமாகவும் நடாத்த முனைகின்றனர்., அத்தகைய ஒரு இழிவுபடுத்தும் பேச்சே அடிமைகள் என்ற எஸ். டி. யின் பேச்சாகும்.

தோட்டத் தொழிலாளரின் மூதாதையர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் யாருக்கும் அடிமைவேலை செய்வதற்கு என்று இங்கு வரவில்லை. அல்லது சும்மா இருந்து தண்டச்சோறு சாப்பிடவும் வரவில்லை. வேலை தரப்படும். அதற்கேற்ற கூலியும்கிடைக்கும், வீடும், ஏனைய வசதிகளும் தாராளமாகத் தரப்படும் என்று வெள்ளை ஏகாதிபத்திய ஏஜமானர்களால் அவர்கள் ஏமாற்றி வரவழைக்கப்பட்டனர். வெள்ளையர்களின் தரகர்களாக இருந்தபெரிய கங்காணிமார்களினால் வீசப்பட்ட எலும்புத்துண்டுகளை நம்பி வந்து ஏமாந்த அப்பாவித் தொழிலாளர்கள்தான் அவர்கள். கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்குமேல் தமது இரத்தத்தையும் வியர்வையும் இந்த நாட்டுக்காகச் சிந்திய உழைப்பாளி வர்க்கத்தினரே அவர்கள். இத்தகைய தொழிலாளர்களைப் பார்த்து அடிமைகள் என்று வர்ணிப்பது கேவலமான அரசியல் சந்தர்ப்பவாதப் பிழைப்பே அன்றி வேறு எதுவுமல்ல.

தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நியச் செலவாணியின் அதிகரிப்புக்கும் உழைத்து உழைத்து உருக்குலைந்த நிலையில் உள்ள உழைக்கும் வர்க்கத்தினர். ஆனால் அதே தோட்டத் தொழிலாளர்களை வசைபாடி இழிவுபடுத்தி தமது வர்க்க ஆட்சியையும், ஆடம்பர சுகபோகத்தையும் தேடிக்கொண்டவர்கள் இலங்கையின் முதலாளித்துவ பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் வரலாற்றில் பலர் வந்துபோய் இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தின் ஒருவராகத்தன்னைக் மாற்றிக் கொண்டு வாழவழி தேடிய எஸ், டி. யே தோட்டத்தொழிலாளர்களை அடிமைகள் என்று பேசி இருக்கிறார். ★

## மலையகத்தின்
# அட்டைகள்

ஒரு காலத்தில் புரட்சி, மாக்ஸியம்—லெனினிஸம் என்றெல்லாம் முழங்கித் தோட்டத் தொழிலாளர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாகி தொழிற்சங்கத் தலைமைக்குத் தங்களை உயர்த்திக்கொண்ட சிலருக்குத் தங்களது பழைய கால வாழ்க்கையை எண்ணிப்பார்க்கவும் மனம் கூசுகிறது. அவர்கள் லயன் காம்பராக்களிலிருந்து வெகுதூரம் முன்னேறி விட்டார்கள். சந்தாப்பணம் என்கிற ஒன்றைவிட்டால் அவர்களது பழைய தோட்டத்துச் சூழலுக்குள் அல்லலடைகிற தொழிலாளி மக்களுக்கும் அந்த மக்களது மாதாந்தச் சம்பளத்தில் பிடுங்கிய பணத்தில் வீடு வாசல், வியாபாரங்கள் பிள்ளைகளுக்குத் தனியார் கல்வி என்று தங்களை உயர்த்திக் கொண்ட சங்கத் துரைமாருக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

இலங்கைக்கு வெளியே அடிக்கடி பயணம் செய்யவும் ஆடம்பரப் பொருட்களுடன் வந்து வீடுகளை அலங்கரிக்கவும் இனிமேல் சீன உறவு உதவாது என்பதால் சோவியத் சார்பு கூட்டத்துடன் சங்கமிக்கத் துடிக்கிற ஒரு கூட்டம் சீனா 'மாஓசேதுங் சிந்தனை வழியில்செல்லவில்லை' என்று தங்களது இழிசெயலுக்கு நியாயங்கூற முனைகிறது. சோவியத் யூனியனில் இப்போது மாஓசேதுங் சிந்தனைதான் ஆட்சி செய்கிறது என்று நினைக்கிறார்களா? பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லத் தெரியாத இந்தக் கள்ளச் சந்தைக்காரர்களை அவர்களது சங்கத் தொழிலாளர்கள் இனங்கண்டு கொள்ள ஆரம்பித்து விட்டனர். ஏற்கனவே உறுப்பினர் தொகை இவர்களது தில்லு முல்லுகளால் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. எல்லாமே முடிந்து போகமுன் அவசர அவசரமாக தொழிற் சங்கக்கடையை சோவியத் எஜமானர்களது ஏஜன்டுகளிடம் விற்க ஓடுகிறார்கள் பாவம்.

அன்று தேசிய தொழிலாளர் சங்கத் தலைவர் அமரர் வெள்ளையனுக்கு அரசியல் உணர்வு போதாது என்று குற்றம் கூறிய கூட்டம் இது. தோட்டத் தொழிலாளர்களது நலனுக்காகத் தன் முழு வாழ்நாளையும் அர்ப்பணித்த அந்த உயர்ந்த மனிதரின் காலைத் தொடக்கூடத் தகுதியில்லாத கும்பல் இது. திரு தொண்டமான் முற்போக்குவாதியல்ல, அவர் முதலாளிதான், ஆனாலும் அவருக்குத் தன் இனத்தைச் சேர்ந்த மக்கள் என்ற அளவில் மலையகத் தொழிலாளரிடம் உள்ள அற்ப சொற்ப அக்கறை கூட இல்லாத வியாபாரிகள் சாயம்போன செங்கொடியில் தொழிலாளிகளைச் சுற்றிக்கட்டி மொஸ்கோவுக்கு விற்க முயற்சிக்கிறார்கள். இந்த மானங்கெட்ட கும்பலைவிடப் பிற்போக்குவாதியான தொண்டமான் பலநூறு மடங்கு உயர்ந்தவர். அவர் தான்சொன்ன சொல்லையாவது கொஞ்சம் மதிப்பவர். இவர்கள்? தூ!

—தேயிலைக் கொழுந்து

### புத்தூர் வேம்பிராய் கிராம மக்களின்
# ஒன்றுபட்ட போராட்டத்தால்
# புதியபாதை திறக்கப்பட்டது!

ஆண்டாண்டுகால சாதி அடக்குமுறையினதும், தீண்டாமையினதும் கொடுமைகளின் சின்னங்களை இன்றும், புத்தூர்ப் பகுதிகளில் நன்கு காணமுடியும். அவற்றின் தாக்கங்களில் இருந்து அப் பகுதித் தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனைய நிலமற்ற மக்களும் விடுபடவே இல்லை. இன்றும் நிலத்தால், பணத்தால், சாதியால், தீண்டாமையால் அமுக்கப்பட்டவர்களாக வாழ்க்கையின் அடி நிலைக்கு தள்ளப்பட்டவர்களாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டே வருகிறார்கள்.

புத்தூரில் வேம்பிராய் கிராமம் சகல வழிகளாலும் பின் தள்ளப்பட்டு அடக்கப்பட்ட மக்களின் கிராமமாகவே இருந்துவருகின்றது. கூலி விவசாயத்திலும், குத்தகை விவசாயத்திலும் சிலல் தொழிலும், ஏனைய உழைப்பிலும் ஈடுபடும் அம் மக்களின் இரத்தத்தை உறிஞ்சி தம் வாழ்வைப் பெருக்கிக் கொண்ட நிலவுடமையாளர்களும், பணக்காரக் கனவான்களும் வசதியான வாழ்வு வாழ்கிறார்கள். ஆனால் அன்றாட உழைப்பிற்கு தமது சக்தியை மிகக்குறைந்த கூலியில் விற்று ஏழைகளாகப், பஞ்சப்பட்டவர்களாக, வாழ்க்கையில் எதையுமே பெற முடியாதவர்களாக 'ஏதோ வாழ்கின்றோம்' என்ற ஏக்கப் பெருமூச்சுடன் மட்டுமே அவ் உழைக்கும் மக்கள் வாழ்கிறார்கள்.

முழங்காலுக்கு கீழ் வேட்டி உடுக்கக்கூடாது, சேட் அணியக்கூடாது. மயிர் சிலுப்பாவிடக் கூடாது, மீசை விடக்கூடாது, செருப்பு அணியக் கூடாது. சைக்கிள் ஓடக்கூடாது. பெண்கள் மேல் சட்டை போடக்கூடாது இவை எல்லாம் நிலபிரபுத்துவ ஆண்டபரம்பரையைச் சேர்ந்த புத்தூர் மனவராயர் அதிகார காலத்தின் நடைமுறைகள். இந்த நடைமுறையில் ஒன்றே அப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல பாதையால் செல்லக் கூடாது என்பதுமாகும்.

ஐந்நூறு குடும்பங்கள் வரையில் வாழும் ஆயிரத்திற்கு மேற்பட்ட பரப்பு நிலம் கொண்ட அக்கிராமத்திற்கு இதுவரை காலமும் ஒரு பொதுப்பாதையே கிடையாது. ஒற்றையடி நடைபாதை தான் நடைமுறையில் இருந்தது. நிலச் சொந்தக்காரர்களான இவ் ஆண்ட பரம்பரையினர் ஒரு பொதுப் பாதை அமைவதை ஒரு போதும் அனுமதிக்கவில்லை.

திருமணத்திற்குச் சென்றாலும், கோவில் விழாவுக்குச் சென்றாலும், மயானத்திற்கு பிரேதத்தை எடுத்துச் சென்றாலும், பிரசவத்திற்குத்தாய்மார்களை கூட்டிச்சென்றாலும், நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றாலும் அக்கிராமமக்கள் ஒற்றையடிப் பாதைகளையே பாவித்தனர். அப்பாதைகள் கூட மழைக் காலங்களில் சேறும் சகதியுமாக நிரம்பி வழியும்நிலையிலே இருந்தன.

இந்த அவல நிலையைப் போக்கவே ஒரு பொதுப் பாதை திறக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்டகாலம் முயன்றனர். நயினார் மார்களுடைய வீடு வீடாகச் சென்று கேட்டுப் பார்த்தனர். கிராம சபையைக் கேட்டனர். ஏனைய பொ ஸ்தாபனங்களுக்கு விண்ணப்பித்தனர். அரச காரியாலயங்களுக்கு மனுப் பண்ணினார்கள். தேர்தலுக்கு வந்த கனவான்களுக்கு இதைக் காட்டினார்கள். எல்லாமே தோல்வியில்தான் முடிவடைந்தன.

அம் மக்கள் மத்தியில் உள்ள இளைஞர்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர். பொதுப் பாதையை திறப்பதற்கு மட்டும் அவர்கள்சிந்திக்க முற்படவில்லை. தமது மக்களின் அவல வாழ்வை மாற்றி அமைக்கும் அரசியல் சிந்தனைக்கு தங்களை ஆட்படுத்திக் கொண்டனர். இனம், மொழி பிரதேசம் என்று இதுவரை கூறித் தங்களை இந்த இழி வாழ்வுக்குள் அமுக்கி வைத்திருந்து வந்த ஆண்டபரம்பரையினரின் ஏமாற்று அரசியலுக்கு அப்பால் புரட்சிகர வர்க்க அரசியலைப் புரிந்து கொண்டு செயல்பட ஆரம்பித்தனர். அங்கே உழைக்கும் கரங்களை அவர்கள் உயர்வாக கண்டனர். ஏழை மக்களை எதிர்கால எஜமானர்களாகக் கொண்டனர். மக்களின் ஐக்கியத்தால் தரமறுக்கும் உரிமைகளை போராடிப் பெற உறுதி பூண்டனர். தலைமுறை தலைமுறையாக எமது மக்கள் வாழ்ந்த இக்கிராமத்திற்குத் தேவையான பொதுப்பாதைக்கு யாரிடமும் கெஞ்சி நிற்பதில்லை என்ற முடிவோடு மக்களை ஒன்றுபடுத்தி புதிய பொதுப்பாதையை திறக்க முன்வந்தனர். அக்கிராம மக்கள் சகல வேற்றுமைகளையும் மறந்து தனி ஒரு மனிதருக மாறினார்கள்.

கடந்த 16-12-83ல் அக்கிராமத்தில் எழுநூறுக்கு மேற்பட்ட மக்கள் ஒன்று கூடினர். ஆண்கள் பெண்கள் இளைஞர்கள், சிறுவர் முதியோர் என ஐக்கியப்பட்டு கிராமத்தின் வடக்கே பிரதானவீதியையும் தெற்கே பிரதான ஒழுங்கையையும் இணைக்கும் இரண்டு மைல் நீளமான கிராமப் பொதுப் பாதையை அசுரவேகத்தில் போட்டு முடித்தனர். பெரிய உழவு யந்திரங்களில், சிறிய உழவு யந்திரங்களில் கிறவல் மண்ணை ஏற்றி இறக்க பல நூற்றுக்கணக்கில் மக்கள் பாதையைத் தாமேபோட்டு முடித்தனர். அங்கே உழைக்கும் மக்களின் ஐக்கியத்தை, பேராற்றலை காணக்கூடியதாக இருந்தது.

இப்பாதையைப் போட்ட புத்தூர் வேம்பிராய் மக்களும் அவர்களுக்கு முன்னணியில் நின்ற இளைஞர்களும் ஒரு எம்பியை, அல்லது அரசஉதவியை ஏனையவர்களின் தயவை நாடிநிற்காது முற்றிலும் தமது சொந்த முயற்சியாலேயே இதைச் சாதித்தனர். இச் செயலைக் கண்ணுற்ற ஆண்ட பரம்பரையினர் நிலைகுலைந்தனர். செய்வதறியாது திகைத்தனர். இதைப்பொறுக்க முடியாது வெவ்வேறு வழிகளில் எதிர்க்க முற்பட்டனர். காவல்துறையினரின் உதவியை நாடினர். ஆனால் மக்களின் உருக்குப்போன்ற ஐக்கியத்தின் முன்னே அவர்களது வீராவேசத்தின் முன்னே அவ் விரத்தம் உறிஞ்சிகளால் நின்று பிடிக்கமுடியவில்லை. ஆண்டாண்டு காலமாக அப்பகுதி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொதுப்பாதை மக்களின் போராட்ட ஐக்கியத்தால், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) சரியான திடமான அரசியல் வழிகாட்டலினால், அப்பகுதி வாலிபர் இயக்கத் தோழர்களின் சளையாத முன் முயற்சியினால் திறக்கப்பட்டது. இது கட்சியின் புரட்சிகர வெகுஜன மார்க்கத்தினதும் வேலையினதும் சரியான நடைமுறையையே எடுத்துக்காட்டுகின்றது. உண்மையான வீரதீரர்கள் மக்களே அன்றி வேறு யாரும் அல்லர் என்பதை புத்தூர் வேம்பிராய் மக்கள் நிரூபித்திருக்கிறார்கள்

## தோட்டத் தொழிலாளர் - நிர்வாகப் பிரச்சினைக்கு

# குண்டர் படை ஏவப்பட்டதேன்?

மலையகப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்குமிடையில் பல்வேறு பிரச்சினைகள் எழுவது உண்டு. அவற்றைத் தீர்ப்பதற்கு, மாநாடு, பேச்சுவார்த்தை, தொழில் நீதிமன்றம், மத்தியஸ்தம் இவற்றுக்கும் மேலால் வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க, ஜனநாயக வழிமுறைகளே கடந்த காலத்தில் பின்பற்றப்பட்டு வந்தன; ஆனால் இந்த அரசு பதவிக்கு வந்தபின் வந்துள்ள புதிய நடைமுறையே தொழிலாளர்களுக்கு எதிராகக் குண்டர்படையை உபயோகிக்கும் முறையாகும். இது 1980யூலை பொதுவேலை நிறுத்தத்துடன் பிரபல்யம்பெற்றது.

இராகலை லிடஸ்டேல் (சூரியகாந்தி, மல்லிகைப்பூடிவிசன்) தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான பிரச்சினை முற்றிலும் தோட்டப் பிரச்சினையாகும். அப்படி இருக்க தோட்டத்திற்கு அப்பால் உள்ள குண்டர்படை ஒன்றைக்கொண்டு வந்து தொழிலாளர்களின் குடியிருப்புகளைத் தாக்கி கொள்ளையடித்தது மட்டுமன்றி, தீவைத்தும் ஒரு வெறியாட்டத்தையே நடத்தி இருக்கிறார்கள். தோட்ட நிர்வாகத்திற்கும் இச் சம்பவத்திற்கும் நிறைய தொடர்பு உண்டு. இது பாசிச சர்வாதிகார நாடுகளில் பின்பற்றப்படும் தொழிலாளர்களுக்கு எதிரான ஒரு நடைமுறையாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் இந்த அரசின் கீழ் சம்பள உயர்வுகளையோ, அல்லது அதி முக்கியமான இதர கோரிக்கைகளையோ பெற்றுக்கொண்டதில்லை. அதற்குப் பதிலாக வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பையும், வேலைநாட்கள் குறைப்பையும், தற்போது புனருத்தாரண வரி என்ற பெயரில் சம்பள வெட்டலையுமே தொழிலாளர்கள் பெறமுடிந்தது. இவற்றுக்கும் மேலால் யூ. என். பி யின்கீழ் இடம்பெற்ற எல்லா இனக் கலவரங்களாலும் தோட்டத் தொழிலாளர்களே அதிகம் பாதிக்கப்பட்ட மக்களாவர். அத்தகைய தொழிலாளர்களுக்கு எதிராகவே இராகலையில் இடம்பெற்ற குண்டர் படைத் தாக்குதல்களும் நடந்துள்ளன.

ஒருபுறத்தில் அன்பு, அகிம்சை, சகிப்புத்தன்மை, பௌத்த தர்மம் என்றெல்லாம் பேசிக்கொண்டு மறுபுறத்தில் தொழிலாளர்கள் என்ற அடிப்படையிலும் இனக்குரோத வழியிலும் குண்டர்படையைப் பாவிப்பதுதான் யூ. என். பி வளர்த்துள்ள தார்மீகத்தின் அர்த்தமாகும். நீதியான, ஜனநாயகமான, நாகரீகமான சமுதாயத்தைப் பற்றி அடிக்கடி பேசும் ஆட்சியின் தலைவர்கள் இராகலையில் இடம்பெற்ற சம்பவத்தை விபத்து என்பார்களா? அல்லது மின்சாரக் கோளாறு என்பார்களா? தாங்கள் கூறும் உபதேசங்களை அவர்கள் இதயசுத்தியுடன் கூறுபவர்களாக இருந்தால் இராகலைத் தொழிலாளர்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களுக்கான காரணகர்த்தாக்களைக் கண்டுபிடித்து உரிய தண்டனை வழங்குவதோடு, தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்குத் தகுந்தநிவாரணமும் வழங்கவேண்டும்.

★

## அகதிகள் முகாமில்

## அடிமை வியாபாரம்!

அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் வேலைசெய்யும் ஒரு ஊழியர், மலையகத்திலிருந்து அகதிகளாக வந்துள்ள குடும்பங்களின் சிறுவர்-சிறுமியர்களை விற்பனை செய்வதற்கு தரகுவேலையில் ஈடுபட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. இதன் மூலம் இவர் ஏராளமாகப் பணமும் சம்பாதிக்கிறாராம்.

அகதிகள் முகாமில் வேலைசெய்யும் இந்த 'தமிழ்த்தரகரின்' தமிழ்த்தொண்டை என்னென்று சொல்வது? பிள்ளை விற்பனைத்தொழில் மூலமாகத்தான் தனதுவயிற்றைவளர்க்க வேண்டுமா? இந்தப் 'புனிதமான' கைங்கரியததை செய்யும் இவர், அகதிகள் முகாமிற்கு வரும் உணவு-உடை போன்றவற்றிலும் தரகு வேலை செய்யாமல் இருப்பாரா?

இத் தரகுவேலை ஒருபுறம் இருக்க, அகதிமுகாம்களில் விற்பனை செய்யப்படும் சின்னஞ் சிறுர்களை வாங்கிச்செல்லும் 'தமிழ் எஜமானர்கள்' செய்யும் கொடுமைகள் அநேகம். இவ் எஜமானர்களின் குடும்பத்தினர், 'தாங்கள் வீடுகளில் செய்யக்கூடிய வேலைகளையே, இச்சிறுர்கள்மூலம் செய்விக்கின்றார்கள். இவற்றில் சிறு தவறுகள் ஏற்பட்டால்கூட சித்திரவதைக்குட்படுத்தப் படுகிறார்கள். இத்தனைக்கும் அவர்களுக்கு நல்ல உணவோ, உடையோ கொடுப்பதில்லை. எஜமானர்களின் சிறுபிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தூர வீசிய உடைகளே இவர்களின் உடைகள்.

இக்கொடுமைகள் 'பொங்கு தமிழர்க்கு இன்னல் என்றால் சங்காரம் நிஜம் என்று சங்கே முழங்கு' என்று மேடைகளில் சங்கு முழங்குபவர்களின் காதுகளுக்கு எட்டுவதில்லையா? எட்டினாலும் மறுகாதால் விட்டுவிடுவார்கள். ஏனெனில் இவர்களின் உறவினர்களே அகதி முகாம்களில் உள்ள அப்பாவிச் சிறுவர்களை அடிமைகொள்கிறார்கள். இனம், வர்க்கம் இவற்றின் உண்மைத தன்மைகளைத் தெரிந்து தெளிவுறுவது நல்லதாகும்.

2-ம் பக்கத் தொடர்

## போராட்டம்...

ளின் நலன்களுக்கு உகந்தவையாக இருப்பதை உறுதிசெய்வது அவசியம். மேலும் போராட்டத்தில் எதிரியார்? நண்பன் யார் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வதும் ஒரு அடிப்படைத் தேவையாகும். இவற்றுடன் கூடவே போராட்ட தந்திரோபாயங்களை மக்கள்நலன் அடிப்படையில் வகுத்து முன்னெடுப்பதும் அவசியமாகும்.

இவற்றைச் சிந்தித்து செயல்படுத்தாது எந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டால் அவை மக்களுக்கு விமோசனம் அளிப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் கஷ்டங்களையும் துயரங்களையுமே தோற்றுவிக்கும். அராஜகம் தலைவிரித்தாடும். போராட்டத்தின் இலக்கு தடுமாறி தோல்வியையே ஏற்படுத்தும்.

உண்மையில் மக்களின் தேவைகளுக்காகப் போராடும் எந்த இயக்கமும சக்திகளும் இவற்றையிட்டு ஆழமாகச் சிந்தித்து செயல்பட வேண்டும்.

★

## நோர்வூட்டில் வாசிகசாலை திறப்புவிழா

கடந்த புதுவருடத் தினத்தன்று (1-1-84) மாலை 2-30 மணியளவில் நோர்வூட் கிழ்ப்பிரிவில், உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் வாசிகசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. தோட்டத்து உதவி அதிகாரியும, நோர்வூட் கிராமோதய சபைத் தலைவர் அவர்களும் பிரதம அதிதிகளாக இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

பிரதம பேச்சாளர்களாக தோழர் இ. தம்பையா (இ.தே.ப.வா.இ.) அவர்களும், திரு. வி. டி. தர்மலிங்கம் (அதிபர்) அவர்களும் சிறப்பு சொற்பொழிவாற்றினர். விடுதலை உணர்வினை தட்டி எழுப்பும் இப்புரட்சிகரப்பணி மலையகம் எங்கும் விஸ்தரிக்கப்பட வேண்டியதன் அவசியம் அவ்விழாவில வலியுறுத்தப்பட்டது. இவ்விழா தோழர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கடிதம்

## கிளிநொச்சிச் சந்தையின் அவலம்!

கிளிநொச்சி நகரம் விவசாயிகளின் முக்கியத்துவம் மிக்க இடமாகும். இந்த நகரம் கிளிநொச்சி தனிமாவட்டமாக்கப்படுவதுடன் மேலும் முக்கியத்துவமும், பிரபல்யமும் அடையப் போகின்றது. ஆனால் அந் நகரத்தின் பல அத்தியாவசிய தேவைகள் கவனிப்பாரற்ற நிலையிலேயே உள்ளன. குறிப்பாக சந்தையானது மிகவும் நெருக்கடியும் சிறிய இடமும் கொண்டதாகவே உள்ளது. அதிலும் மழைகாலத்தில் மனிதர்கள் கால்வைக்க முடியாத அளவு சேறும் சகதியுமாகவே இருக்கின்றது. இதனால் தமது விவசாய விளைபொருட்களை விற்பனை செய்யவரும் விவசாயிகளும், பொருட்களை கொள்வனவு செய்யும் மக்களும் படும் அவலம் வேதனைக்குரிய தொன்றாகும். கிளிநொச்சி சந்தையின் மழைகால அவல நிலைக்கு ஒரு மாற்றுத்திட்டம் அவசியம் என்பதை சகல மக்களும் உணருகிறார்கள், ஆனால் கிளிநொச்சியின் அரசஅதிகாரிகளும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. எனவே சந்தை நெருக்கடியைக் குறைப்பதும், சேறு சகதிக்கு மாற்று வழி காண்பதும் விவசாயி மக்களைப் பொறுத்தவரை ஒரு அவசரத்தேவையாகும். இதில் சுயநலன்களுக்கோ அல்லது அசட்டைத்தனத்திற்கோ இடம் இருக்க முடியாது. பெரும்பான்மையான விவசாயிகளினதும் பொதுமக்களினதும் தேவைக்கு ஏற்றவிதமாக கிளிநொச்சி சந்தையின் அவலநிலைமாற்றப் படவேண்டும் என்பதே எமது எல்லோரதும் விருப்பமாகும். இதற்கு உரியவர்கள் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

க. சிவசங்கரன்
6-1-84 கிளிநொச்சி

## எங்கே போகிறோம்? 3-ம் பக்கத் தொடர்......

இல் முன்னணி நாடுகளில் ஒன்றாக இருந்த இலங்கை இன்று வேகமாக வீழ்ச்சி கண்டு வருகிறது. இப்போக்கை யூ. என். பி யின் கல்விக்கொள்கை துரிதகதி விழ்ச்சியாக வளர்வதுவிட்டது

இதிலுள்ள விசேஷ நிலைமையென்னவென்றால், இந்த விசயத்தில்கூட யாழ்ப்பாணம் தான் 'முன்னணி' வகிக்கிறது. இதனாலேதான், இலங்கையின் கல்வித்தரத்தில் முதல் இடத்தை வகித்துவந்த யாழ்மாவட்டம் இன்று எட்டாவது இடத்தை நோக்கிச் சரிந்திருக்கிறது (இதற்கான அரசியல் —பொருளாதார சமூக—புறக் காரணிகளை ஆராய இது இடமல்ல) இருந்தாலும் விஞ்ஞானக் கல்வியில் இன்னும் யாழ்ப்பாணமே முதலிடத்தை வகிக்கிறது. இதற்கு B Sc ஆசிரியர்கள் அதிகமாக உள்ளதும், ஏனைய இடங்களைக்காட்டிலும் ஆய்வுகூட விருத்தி அதிகமாயுள்ளதும், முன்பிருந்தே விஞ்ஞானத்துறைமீதான அதிகளவு நாட்டம் இருந்துவருவதும் காரணங்களாகும். இந்த நிலைமைகளிலும் வேகமாக வீழ்ச்சியேற்பட்டுவருகிதது. ரியூற்றறிமுறை, ஆய்வுகூடம்-நூல்நிலையம் பாவிக்கப்படுவது அருகிவருதல், வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அங்கலாய்ப்பும் அவ்வாறு சென்று காசைச் சுளையாகப்பெற இந்தப்படிப்பு எதற்கு என்ற மனோபாவமும் போன்ற காரணிகள் ஏனைய மாவட்டங்களைக் காட்டிலும் யாழ்ப்பாணத்தில் அதிகளவில் வளர்ந்துவருவதை யாரும் மறக்க முடியாது.

இந்தக்காரணங்களும், கல்விச்சீரழிவும், இவற்றை அரசு ஊக்குவிப்பதும் முழு இலங்கைக்கும் பொருந்தும் என்றபோதிலும் இவற்றில் யாழ்ப்பாணம் எப்படி முன்னுதாரணமாயிருக்கிறது என்பது எல்லோரும் பெற்றுக வேண்டிய பிரதான படிப்பினையாகும்.

இங்கு, ரியூற்ரறிகளினால் சிறுகச் சிறுக வளர்ந்துவரும் கலாச்சாரச் சீரழிவை நோக்கிய வளர்ச்சியையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இதற்கு ரியூற்ரறிகள் ஒன்றும் செய்வதற்கில்லை, அவர்களால் பணத்தைப்பெறமுடியும்-பாடசாலைகள்போல் சீருடை, கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்றவற்றில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியுமா? இதனால் கிராமப்புற மாணவர்கள் விரலுக்கு ஏற்ற வீக்கம் என்றில்லாமல், நகரத்துக்கு வந்து தமது சொந்தசமூகச் சூழலைமறந்து சீரழிவது ஒருபுறமிருக்க, மிகப் பெரும்பான்மையான கிராமப்புற மாணவர்கள் பலதரப்பட்ட கஷ்டங்கள் காரணமாகக் கல்வியைத் தொடரமுடியாமல் திணறுகிறார்கள்.

இதைமேலும் உக்கிரமடையவைக்கும் வேலையில் அரசு தீவிரமாக இறங்கியிருக்கிறது. அரசு, இலங்கை எங்கும் தமிழ்—சிங்கள— முஸ்லிம் மக்களனைவராலும் ஒருமித்த குரலில் நிராகரிக்கப்பட்ட கல்வி வெள்ளையறிக்கையைத் திட்டமிட்டுச் செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் கல்வி வெள்ளையறிக்கை, கொத்தணிமுறை மூலம் கிராமப்பாடசாலைகளைப் புறக்கணிக்கும் அதன் நடவடிக்கைத்திட்டம் காரணமாகவே பிரதானமாக எதிர்க்கப்பட்டது. அந்த மக்கள் அபிப்பிராயத்தைச் சிறிதும் மதியாமல் 'பரீட்சார்த்தமாகச் சில தொகுதிகள்' என்ற போர்வையில் கொத்தணிமுறையைச் செயற்படுத்திக்கொண்டிருக்கிறது அரசு. அதன் அடுத்த நடவடிக்கையாக வருகிற தவணையும் சில தொகுதிகள் பலிக்கடாக்களாக்கப்படவுள்ளன. அவர்கள் முன்பின்னாக ஒவ்வொரு தொகுதியிலும் நடைமுறைப்படுத்தி ஒருமித்த எதிர்ப்பைத் தவிர்ப்பதில், தடிகளை ஒரே கட்டாக இல்லாமல் தனித்தனியாக எடுத்து முறிக்கும் தந்திரத்தைக் கையாள்கிறார்கள். இதன்மூலம் சாதாரண மக்கள் மத்தியிலிருந்து மூளை உழைப்பாளிகள் வருவதைத் தடுதது, உயர் உத்தியோகங்களை மேட்டுக்குடியினர்க்கே உரித்தான ஒன்றாக உத்தரவாதம்செய்ய முயல்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, புத்தகப்படிப்பென்பது உயர்குடிப் பிறப்புகள் ஒய்யாரமாக இருந்து உயர்பதவிகளை அலங்கரிப்பதற்கான ஒன்றேயன்றி மக்களுக்குச் சேவை செய்வதற்கான ஒன்றல்ல. அதனால் உயர்கல்வி வாய்ப்பைக் கிராமப்புறங்களிலிருந்து பூண்டோடு துடைத்தழிக்கும் நோக்குடன் யூ என்பி அரசு இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கிறது. இதை எதிர்த்து, விழிப்படையவேண்டிய வேளை முழு இலங்கையின் ஒடுக்கப்பட்ட - கிராமப்புற- மலையக- பின்தங்கிய பிரதேசங்களின் 90 வீதமான மக்கள் முன்னுள்ள உடனடிக்கடமையாகும். அத்தோடு, வீழ்ந்துவரும் எமதுகல்வித்தரத்தைப் பாதுகாப்பதும், ஒன்றிணைக்கப்பட்ட தேசிய, விஞ்ஞான, ஜனநாயகக் கல்வியமைப்பை நோக்கி முன்னேறுவதும் எப்போதும் எம்மை எதிர்கொள்ளும் ஒரு நீண்டகாலப் பிரச்சனையாகும்.

இவற்றை உணர்ந்து நாமெல்லோரும் ஒருங்கிணைந்து போராடுவதமூலம், நாட்டின் இன்றைய நிலையை சாதகமாக்கித் தன் சதியை நிறைவேற்றும் அரசின் எத்தனிப்பைத் தடுத்தாகவேண்டும். ★

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு சி. நவரத்தினம் 15/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.